# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 32வது கூட்டறிக்கை 2020.10.13

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 32வது அமர்வு 2020.10.13 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 04. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 06. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 32வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இன்று நாட்டில் நாளாந்தம் மாறி வரும் Covid 19 இன் அழுத்தம் காரணமாக நமது சகல நடவடிக்கைகளையும் மிகவும் கவனமாகவும் கட்டுப்பாட்டோடும் நடக்க வேண்டிய ஒரு தேவை

இருக்கின்றது. நாளாந்தம் செய்திகளின் படி நிலமை மோசமாக வந்து கொண்டிருக்கின்றது. இன்று செய்தியில் அத்தியாவசிய தேவை இன்றி தலை நகருக்கு பயணம் செய்ய வோண்டாம் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில் ஏறத்தாள 06 மாதங்களாக நாம் இந்த வைரசினால் நமது வருமானத்தில் பாரிய வீழச்சியை கண்டிருக்கின்றோம். இதில் இவ் வருடத்தை நாம் எப்படி பூர்த்தி செய்வது? அடுத்த வருடத்திற்கு எப்படியான ஒரு வரவு செலவு திட்டத்தை உருவாக்குவது என்பது ஒரு சவாலாக மாறியுள்ளது. உங்களுக்கு தெரியும் இந்த 06 மாதங்களில் ஏறத்தாள 04 மாதங்களுக்கு நமது வருமானத்தில் முக்கிய அம்சங்களான திறந்த வெளி சந்தை, இறைச்சிக் கடைகள் குத்தகைகளின் கழிவுகள் வழங்கப்பட வேண்டிய நிலவரம் உருவாகி, அக் கழிவுகள் கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்டு வரும் ஒரு நிலைமையில் இருந்து கொண்டு, இன்று நாம் நமது நிதி நிலமையை பார்ப்போமானால், தற்போது உங்களுக்கு 02 sheet தந்திருக்கின்றார்கள். அதில் ஒன்று 09 மாதத்திற்குரிய வருமானமும், மற்றயது 09 மாதத்திற்குரிய செலவும் ஆகும்.

Budget இன் வருமானத்தில் ஏறத்தாள 30% வருமானத்தையும், செலவில் 39% செலவுகளையும் பூர்த்தி செய்திருக்கின்றோம். இதை சபையின் வருமானமும் சபையின் செலவுகளும் என்று பார்க்கும் போது சபையின் வருமானமாக நாம் ஏறத்தாள 57 மில்லியனை 09 மாதங்களுக்கும் பெற்றிருக்கின்றோம். அதன் முக்கிய பங்குகள் நீதிமன்ற தண்டப்பணம் 12 மில்லியன், முத்திரை தீர்வு 10.7 மில்லியன், இறைச்சிக்கடை குத்தகை 14 மில்லியன், திறந்த வெளிச்சந்தை 5.6 மில்லியன் ஆகும். இவை எல்லாம் உள்ளடக்கியதாக சபையின் மொத்த வருமானம் 57 மில்லியன் ஆகும். இன்று வரை நமது மொத்த செலவீனம் 48.6 மில்லியன். அப்படியானால் நமக்கு மீதியாக 8.4 மில்லியன் கையிருப்பில் இருக்கின்றது. அதை வைத்து 10ம் மாதம், 11ம் மாதம், 12ம் மாதம் எதிர்பார்கப்படுகின்ற காசுப் பாய்ச்சல் கூற்று 5.9 மில்லியன் ஆகும். எதிர்பார்க்கப்படும் தொகை நமக்கு கிடைக்குமானால் அதாவது 06 மில்லியன் என்று சொன்னால் 16.5 மில்லியன் இருக்கும் வைப்பு 8.4 மில்லியன், இதில் எதிர்பார்க்கப்படும் வருமானம் 06 மில்லியனாக பார்போமானால் 14.4 மில்லியன் நமக்கு கையில் வரலாம். அப்படி வரும் போது நமக்கு எதிர் பார்க்கப்படும் செலவு கிட்டத்தட்ட 15 மில்லியன் ஆகும்.

இது அடிப்படைத் தேவைகளுக்கு மட்டும் எந்த ஒரு கட்டுமான வேலையோ, எந்த ஒரு அபிவிருத்தி வேலையோ இல்லாமல் அங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் 07 தலைப்புகளுக்கு கீழ் தரப்பட்டிருக்கும் செலவுகள் மொத்தம் வெளிப்பாய்ச்சல் 15.5 மில்லியன் என்று பார்க்கும் போது அங்கு ஏறத்தாள 01 மில்லியன் மிச்சமாக தேவைப்படுகிறது. இது எமது வருமானமும் நேரடிச் செலவும் ஆகும். மாறாக மேலதிகமான வைப்பில் ஏறத்தாள 23.4 மில்லியன் நமக்கு வைப்பில் இருக்கின்றது. அதனால் அந்த 23 மில்லியனில் இருந்து 15 மில்லியனை கழித்தால் 7.9 மில்லியன். அதில் மேலதிக தேவை 01 மில்லியன் சென்றால் எமது இருப்பு ஏறத்தாள 07 மில்லியன் மொத்த பண வைப்பு இருப்பாக இருக்கும். இந்த 07 மில்லியனிற்குள் தான் நாம் இச் செலவுகளுக்கு மேலாக தேவையான செலவுகளை செய்ய வேண்டிய ஒரு நிலை ஏற்படுகின்றது. உங்களுக்கு தெரியும் அரசாங்கம் இன்று அமைச்சரவையில் ஒரு தீர்மானம் எடுத்திருக்கின்றது. அதாவது மாடுகள் அறுப்பதை தடை செய்வதாக, அப்படி ஒரு சட்டம் 2021 இல் அமுலாக்கப்படுமானால் நமக்கு அது வருமானத்திற்கு பாரிய ஒரு அழுத்தத்தை கொண்டு வரும். ஏறத்தாள 15 மில்லியன் நமது வருமானத்தின் இழப்பாக இருக்கும்.

இதனை உள்வாங்கிக் கொண்டு நமது 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தினை தயாரிக்கும் சவால் எமக்கு உண்டு. அதில் உங்களின் பங்களிப்புகளை ஆக்கபூர்வமாக செய்வதற்காக உங்களுக்கு 2021 ஆம் ஆண்டிற்குரிய உத்தியோகத்தர்களினால் தயாரிக்கப்பட்ட Draft Budget தரப்பட்டிருக்கின்றது. அதை நீங்கள் மக்களோடு கலந்து ஆலோசித்து உங்களின் பங்களிப்புகளை செய்வீர்களானால் நாம் ஒரு விசேட அமர்வை ஏற்படுத்தி அதை கலந்து ஆலோசித்து அடுத்த வருடத்திற்கு எப்படியான ஒரு வரவு செலவு திட்டத்தை தயார் செய்யலாம் என்ற முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கின்றது. அதே வேளை இந்த அரசு ஒரு இலட்சம் கிலோ மீற்றர் பாதைகள் புணரமைக்கப்படும் திட்டத்தின் கீழ் இன்று வரை எமது எல்லைக்குள் MOTEC

Engineering Construction நிறுவனத்திற்கு வண்டு வீதி, கொச்சிக்காய் தூளர் சந்தியில் இருந்து அம்பாரை வீதி வரை, காஞ்சா வீதி சென்னல் கிராமம் - 01, மதரஸா வீதி சென்னல் கிராமம் - 01, புளியடி வீதி சென்னல் கிராமம் - 02, அதே போல் வின்னாங்கனி பாம் வீதி, மல் 19 குறுக்கு வீதி போன்ற இப் பாதைகள் MOTEC Engineering நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை நமக்கு அறிவித்துள்ளது. இதே போல் கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களும் ஏறத்தாள 27 பாதைகளுக்கு பரிந்துரை செய்திருக்கின்றார். அது வழங்கப்படுமானால் சம்மாந்துறையின் பாதைகள் சீர்திருத்தத்தில் பாரிய மாற்றம் ஏற்படலாம் என்று கூறியவனாக,

செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது நீங்கள் கூறிய அனைத்து விடயங்களும் எங்களது சபையின் எதிர்கால நடவடிக்கைகளை எப்படி கொண்டு செல்வது, வருமானத்தை நாம் ஈட்டுவதற்கான வழி முறைகள். ஏற்கனவே நான் அறிந்த வரையில் தற்காலிக ஊழியர்களுக்கான கொடுப்பனவு 03 கட்டமாக 2.6 மில்லியன் வருகின்றது. 91 ஊழியர்கள் சபையில் அமைய ஊழியர்களாக இருக்கின்றார்கள். 91 ஊழியர்களில் 36 ஊழியர்கள்தான் கழிவகற்றல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஏனைய ஊழியர்கள் எந்த அமைப்பில், என்ன அடிப்படையில் எடுத்திருக்கின்றது என்று இந்த சபையில் இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் நிச்சயமாக தெரிந்திருக்க வேண்டும். காரணம் என்னவென்றால் நாங்கள் இந்த சபைக்கு அரசியலின் ஊடாக தெரிவு செய்யப்பட்டு வந்தவர்கள். இந்த சபையில் நாங்கள் தற்போது எப்படி அந்த ஊழியர்களை உள்வாங்கினோமோ அந்த அமைப்பில் இந்த சபையில் இருக்கின்ற 20 அங்கத்தவர்களிடம் இந்த அடிப்படையில் உள்ளவர்கள் தேவை என்று சொல்லி ஒருவருக்கு 03 பேர் வீதமாக கொடுத்திருந்தால் சபையின் கட்டுப்பாட்டிலையே அந்த ஊழியர்கள் இருந்திருப்பார்கள். இடை நடுவே கூட்டங்கள் போட தேவையில்லை.

அடுத்ததாக எங்களது நிர்வாக வேலைகளுக்கு 07 பட்டதாரிகளை தந்திருக்கின்றார்கள். இன்னும் தேவை என்றால் மேலதிகமாக பெற்றுக் கொள்ள முடியும். இப்படி இருக்கும் போது நீங்கள் அடிக்கடி கூறுவது எதிர்காலம் எப்படி? எதிர்காலத்தை கொண்டு செல்வது எப்படி? வருமானத்தை பெறுவது எப்படி? வருமானம் இப்படி அகன்ற வாய்க்காலாக இருந்து ஒடுங்கிய பாதையில் வந்து கொண்டிருக்கின்றது. இந்த வேளையில் இந்த மாதிரி சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும். இதில் இன்னுமொரு விடயம் மேலதிக நேர கொடுப்பனவு ரூபா 87000.00 இந்த Budget இல் இருக்கின்றது. அப்படி என்றால் ஏற்கனவே எம்மிடம் நிரந்தர ஊழியர்கள் இருக்கின்றார்கள். மேலதிகமாக 91 ஊழியர்களை எடுத்து கழிவகற்றல் பகுதிக்கு 31 ஊழியர்கள் வேலைக்கு வந்து கொண்டிருந்தால் ஏனையவர்கள் என்ன அடிப்படையில் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள், அவர்கள் எங்கு வேலை செய்கின்றார்கள் என்று எங்களுக்கு உண்மையாக தெரியாது.

கௌரவ தவிசாளர் அவர்களே, சில விடயங்களை நாங்கள் உங்களிடம் கேட்க விரும்புகின்றோம். இது 32வது அமர்வாக இருக்கின்றது. நாங்கள் உங்களிடம் எந்தவொரு கேள்வியும் கேட்கவில்லை. நாங்கள் தெரிந்து கொள்வதற்கும், புரிந்து கொள்வதற்கும் ஒரு வித்தியாசம் இருக்கின்றது. நாங்கள் மரணிக்கும் வரைக்கும் ஒவ்வொருவரையும் புரிந்து கொண்டால் நாங்கள் எந்தவொரு பிரச்சினை இல்லாமலும் அன்பாகவும், பண்பாகவும் வாழலாம். தெரிந்து மட்டும் வைத்துக் கொண்டிருந்தால் உண்மையாக இடை நடுவில் உடைவதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. இந்த புரிதலுக்கான கேள்வியை உங்களிடம் கேட்க விரும்புகின்றேன். அதாவது இச் சபையில் வேலை செய்யும் ஊழியர்கள் நாங்கள் 20 பேரும் பொறுப்பு கூற வேண்டியவர்கள். இந்த சபையால் இடைக் காலத்தில் மின் விளக்குகள் பொருத்தியதற்கான செலவீனத்தை முறையாக செலவளிக்கப்பட்டிருக்கின்றதா என்று நீங்கள் கூர்ந்து அவதானித்ததை நான் அறிவேன். எனவே ஒவ்வொரு விடயத்திலும் நாங்கள் கூர்ந்து அவதானித்துதான் ஒவ்வொரு வேலையும் செய்ய வேண்டும். ஏனென்றால் உங்களது உண்மையான நேர்மைக்கு நாங்கள் தலை வணங்குகின்றோம். அதே போல் நாங்களும் சில விடயங்களை புரிந்து வைத்திருந்தால்தான் மற்றவர்களிடம் தெரிந்து

பதில் அளிக்க முடியும். இந்த சபையில் ஒவ்வொரு மாதத்திலும் எவ்வளவு வங்கி இருப்பு இருக்கின்றது என்று எங்களுக்கு அதன் பிரதி ஒவ்வொருவரின் கையில் இருக்க வேண்டும். இந்த சபையில் நீங்கள் இன்று கூறியது போல் நாங்கள் நிலையான வைப்பு எவ்வளவு வைத்திருக்கின்றோம் என்று எங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். நாங்களும் உங்களிடம் சிறுபிள்ளைத் தனமாக நீங்கள் கூறியது போல் சிறு பிள்ளை அடம் பிடிப்பது போல் நாங்கள் இனிமேல் அவ் வார்த்தைக்கு வரக்கூடாது. ஏனென்றால் உங்களோடு பயணித்துக் கொண்டிருக்கின்ற 82 மாதமும் நாங்கள் சகல வேலைகளையும் தெரிந்து கொள்கின்ற அடிப்படையில் நடந்து கொண்டோம். தற்போது புரிந்து கொள்கின்ற அடிப்படை என்று சொன்னால் சகல விடயங்களையும் அறிய வேண்டும். இதன் அடிப்படையில் நீங்கள் ஒரு களங்கமற்றவர் என்ற வகையில் அனைத்தையும் எங்களிடம் சமர்ப்பிப்பீர்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் நான் இதை கேட்டுக் கொள்கின்றேன்.

சபையில் நீங்கள் எவ்வளவு நிலையான வைப்பு வைத்திருக்கின்றீர்கள் என்று கேட்டால், அதற்கு சரியான பதில் சொல்ல தெரியாது. எவ்வளவு நடைமுறை இருப்பு என்று கேட்டால் எங்களுக்கு தெரியாது. நாங்கள் மேலும் எதை எதை செயற்படுத்தப் போகின்றோம் என்றால் தற்போது தெரியும். சட்டிக்குள் இருந்தால்தான் அகப்பையில் வரும். சட்டிக்குள் இல்லாத விடயத்தை நாங்கள் கூறுவது எங்களது புரிதலின் அடிப்படை இல்லாத தன்மை தான். தயவு செய்து இந்த விடயத்தில் 91 ஊழியர்களின் விபரம் என்ன வேலை செய்கின்றார்கள், என்ன அமைப்பில் உள்வாங்கப்பட்டார்கள் என்பதை நாங்கள் அறிந்திருக்க வேண்டும். ஏனென்றால் நீங்கள் எல்லோரையும் விட ஒரு வித்தியாசமான ஒரு கணவான் அமைப்பு உங்களிடம் இருக்கின்றது. அதை நாம் கௌரவப்படுத்துகின்றோம். ஆனால் நாங்கள் அப்படி அல்ல. நாங்கள் அரசியல் செய்ய வந்தவர்கள். எனவே எங்களுக்கு அரசியல் வேண்டும். எங்களது ஆதரவாளர்கள் நீங்கள் உள்வாங்கப்பட்ட அமைப்பில் எங்களிடமும் ஒவ்வொரு உறுப்பினரிடம் 03 பேர் வீதம் தர முடியாத நிலையில் அரசியல் செய்யவில்லை.

எனவே இப்படியான இக்கட்டான நிலமை ஏற்படுகின்ற போது நாங்கள் அழைத்து இதுதான் நிலமை என்று கூறி அவர்களை தற்காலிகமாக சிறிது நாளைக்கு உங்கள் வெவ்வேறு வேலைகளை பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி நாங்கள் அவர்களை பணிக்கலாம். இப்படி பல விடயங்கள் இருக்கின்ற படியால் நான் உங்களை மிகவும் பணிவாக வேண்டிக் கொள்வது என்னவென்றால் எங்களுக்கு இனிமேல் சபையைப் பொருத்தவரையில் புரிதல் வேண்டும். எல்லா விடயத்தையும் நாங்கள் புரிந்து வைத்திருந்து பொதுமக்களுக்கு பதில் அளிப்பவராக எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் கேள்வி கேட்டாலும் பதில் வழங்கக் கூடிய புரிதல் தன்மையை ஏற்படுத்த வேண்டும் என்று இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன். இது இந்த ஊழியர்கள் சம்மந்தமாக மட்டும் இதில் இருந்ததனால் கதைத்தேன் ஏனையவர்கள் மற்றவர்களின் கருத்தை கூறலாம் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் கேட்ட விடயங்களுக்கு நான் முழுமையாக பதில் தரவேண்டிய கடமை இருக்கின்றது. தெளிவாக மற்றவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கிய பின் அதற்கு எந்த ஒழிவு மறைவு இல்லாமல், இருந்ததும் இல்லை இருக்கப் போவதும் இல்லை. ஆனால் நீங்கள் புரிவதற்காக அந்த விளக்கங்களை தர வேண்டியவனாக,

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 500 பொதுப்பயன்பாட்டுச் சேவையில் சபையின் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்ட 20 கொங்றீட் இருக்கைகள் ரூபா 84000.00, அது எங்கு போடப்பட்டுள்ளது? சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபை தீர்மானம் எடுக்கப்பட்டுதான் இது கொள்வனவு செய்து நிறுவப்பட்டுள்ளது. அதன் விபரங்களை உங்களுக்கு தருவதற்கு நான் செயலாளரை பணிக்கின்றேன். புரிதல் ஒன்று ஏற்படுத்த வேண்டும். நிச்சயமாக அது இனி வரும் சபைகளில் நடக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 100 பொது நிர்வாகத்தில் 05வது அமைய ஊழியர் சம்பளம் ரூபா 54138.43 ஆகும். அதே போல் சுகாதார சேவைகள், வெளிப்புறத் திட்டமிடல் போன்ற 03 தலைப்பின் கீழ் வருகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
03 தலைப்பின் கீழும் வரும். நீங்கள் Budget இனை பார்த்தால் விளங்கும் பொது நிர்வாகத்திற்கு வேறாகவும், சுகாதாரத்திற்கு வேறாகவும், வெளிப்புறத்திட்டமிடலுக்கு வேறாகவும் 03 இடங்களில் வரும். நிர்வாகத்தில் உள்ளவர்கள் ரூபா 54000.00, சுகாதார சேவையில் 14 இலட்சம், வெளிப்புறத்திட்டமிடல் 1.1 மில்லியன் மொத்தமாக பார்த்தால் 2.7 மில்லியன் வரும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சுகாதார சேவையின் கீழ் உழவு இயந்திரம் RA – 2466 இலக்க வாகனம் ரூபா 167000.00, இந்த வாகனத்திற்கு என்ன நடந்தது? ஏன் இவ்வளவு செலவு ஏற்பட்டது என்றும் தெரியாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது சபையில் அங்கீகரிக்கப்பட்டது. இதன் விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 300 இல் 10வது ZA- 5277 இலக்க JCB வாகன சேர்விஸ் ரூபா 7000.00, நானும் ஒரு கணரக வாகனங்களை வைத்து தொழில் செய்பவர். ஆகவே எனக்கும் இந்த சேர்விஸ் தெரியும். இது ரூபா 7000.00 கொடுத்து செலவளிக்க வேண்டிய தேவை ஒன்று இல்லை. ரூபா 7000.00 கொடுத்து எங்கும் சேர்விஸ் செய்வதில்லை. இது ஒரு பெரும் தொகை. ரூபா 2500.00, ரூபா 3000.00 தான் எனது வாகனங்களுக்கும் சேர்விஸ் செய்வது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எங்கு சேர்விஸ் செய்யப்பட்டுள்ளது என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதே போல் LED Digital Advertising Board இது ஏன் இவ்வளவு காலமும் பாவிக்கப்படாமல் இருக்கின்றது?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதில் 02 பிரச்சினைகள் இருக்கின்றது. ஒன்று அதனை ஆரம்பிப்பதற்கு 60 அம்பியர் தேவைப்படுகின்றது. நமக்கு Supply காணாது. CEB இடம் நாங்கள் கேட்டிருக்கின்றோம். அது இக் கிழமைக்குள் அதன் Estimate வரும். Transformer போட்டு செய்வதற்கு, உங்களுக்கு அதன் சரித்திரம் தெரியும். நீங்கள் அதில் ஈடுபட்டு இருந்தவர். அதை பொருத்திய நேரம் அதில் சில பாவித்த பாகங்கள் பொருத்தியதால் அது தொடர்பில் எழுத்து மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. நிவர்த்தி செய்வதற்கு Import இல் சில பாகங்கள் இருக்கின்றது. அதை Clear பண்ணியவுடன் பூர்த்தி செய்துவிட்டு மீதிப் பணத்தை பெறுவதாக எழுத்து மூலம் தந்த பின்னர்தான் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அது பூர்த்தி செய்யப்படாமல் முழுக் கட்டணமும் கொடுக்கப்படாது. இதில் நீங்களும் சகலதையும் அறிந்தவர். அந்த காலகட்டத்தில் என்னோடு இருந்து இப் பிரச்சினையை பார்த்தவர். அதை நீங்கள் சபைக்கு தெளிவு படுத்தியதற்கு நன்றி கூறியவனாக, இதற்குரிய பாதுகாப்பான நடவடிக்கைகள் செயலாளரினால் செய்யப்பட்டிருக்கின்றது. அது ஏறத்தாள ஒரு கிழமை அல்லது இரு கிழமைக்குள் நான் Exchange Control உடனும் இறக்குமதி ஆணையாளருடனும் பேசி இருக்கின்றேன். ஏனென்றால் இதற்குரிய சில பாகங்கள் துறைமுகத்தில் உள்ளது. அதை Clear பண்ணுவதற்கான அனுமதி கேட்டு நான் ஒரு கடிதமும் கொடுத்திருக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபையின் மூலமாக பழைய பொருட்கள் கொள்வனவு செய்ய முடியுமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
செய்ய முடியாது. அந்தப் பிரச்சினை அவர் பொருத்திய பின்னர்தான் தெரிய வந்தது. நீங்களும் அந்த நேரம் இருந்தீர்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நானும் இருந்தேன். அப்போது நான் கேட்டேன், இது பழைய பொருள் என்பது நீங்கள் நன்றாக அறிவீர்கள். இதை நீங்கள் காத்தான்குடிக்கு சென்று பார்த்து வந்து அதற்கு பிற்பாடு பொருத்தப்பட்டுள்ளது. இந்த உண்மைகள் மறுக்கப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, நீங்கள் என்னிடம் வந்து அந்த Electrician உடன் பேசிய பின்புதான் உங்களுக்கும் தெரியும் நான் அடுத்த நாள் சென்று பார்த்துவிட்டு வந்து அந்த நபரை இங்கு அழைத்து பேசி அவரிடம் ஒரு உத்தரவாத கடிதம் எடுத்து செயற்பட்டது. இந்த கொடுப்பனவில் உண்மையாக நிர்வாக ரீதியில் அது ஒழுங்காக செய்யப்பட்டிருந்தால் அதில் அந்த குளர்பாடுகள் வந்திருக்க முடியாது. ஆனால் சபையை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அந்த உறுதிமொழியை எடுத்துவிட்டுதான் அது பூர்த்தியாகும் வரைக்கும் அவர் அதை செயற்படுத்தி இருப்பார் ஆனால் நமது CEB Power காணாமல் இருந்தது. அதற்கு முழுப் பொறுப்பும் தவிசாளர் என்ற ரீதியில் நான் அதை எடுக்கின்றேன். அப்படி அதை நிவர்த்தி செய்யாவிட்டால் அந்த 03 மில்லியன் ரூபாவினை நான் இந்த சபைக்கு கையளிப்பதாக நான் உங்களுக்கு உறுதி மொழி கூறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபையை தவறாக வழி நடாத்தி பணத்தை தவறான வழியில் செலவளித்த பின்னர் அதனை சொந்தப்பணத்தில் தருகின்றேன் என்று நீங்கள் செய்த குற்றத்தை ஒப்புக் கொள்கின்றீர்களா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நிர்வாகப் பொறுப்பு எனது குற்றமல்ல. ஆனால் தவிசாளர் என்ற ரீதியில் என் கீழ் அப்படி ஒரு பிழை நடந்து இந்த சபைக்கு அது நட்டம் ஏற்படுமாயின் நிச்சயமாக அந்த நஸ்டஈட்டை நான் வழங்குவதற்கு உங்கள எல்லோர் முன் நான் அந்த உறுதிமொழியை வழங்குகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது மட்டுமல்ல தவறு. எமது வீரமுனை நூலகத்திற்கு கட்டப்பட்ட பாலம் அப் பாலம் எங்கு போய் இருக்கின்றது? எவ்விடத்தில் போய் இருக்கின்றது? தற்போது நாங்கள் கேள்வி கேட்கும் போதுதான் இதற்குரிய தெளிவு கிடைக்குதே தவிர இதற்கு முன்னர் கிடைக்கவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தவிசாளரின் அனுமதி இன்றி எவரும் சபையில் உரையாற்ற முடியாது அந்த ஒழுங்கிற்கு நீங்கள் அடிபணியாவிட்டால் நான் உங்களுக்கு பேசுவதற்கு அனுமதி தரமுடியாது. உங்களுக்கு அந்த அனுமதியை தந்து உங்களை பேச வைத்து உங்களின் கேள்விகளுக்கு பதில் தருகின்றேன் என்று கூறிய போது, இன்னும் ஒரு உறுப்பினர் எழுந்து கேட்ட பிரச்சினை, அது அவருக்கு தெரிந்த பிரச்சினை அவர் பிரச்சினையாக கொண்டு வருகின்றார். நான் அதற்கு விளக்கம் தந்து கொண்டிருக்கும் போது நீங்கள் சபையை குழப்பும் முயற்சியில் ஆரவாரம் செய்வீர்களானால் இவ்வளவு காலமும் இந்த சபையின் கௌரவத்தை பேணி வந்ததற்கு ஒரு அர்த்தம் இல்லாமல் போய்விடும். இது ஒரு அரசியல் களம் அல்ல.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கேள்வி கேட்டு இங்கு இருக்கும் அங்கத்தவர்களிடம் பதிலை எதிர்பார்க்கவில்லை. அதனால்தான் இந்த கூச்சலும், குழப்பமும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நான் இந்த சபையில் எதையும் ஒழித்து செய்ததில்லை. எல்லோருக்கும் தெரிந்த விடயங்கள், நீங்கள் எல்லோரும் அங்கீகரித்த விடயங்கள். இப்போது ஒவ்வொரு விடயத்தையும் நீங்கள் திரிபு படுத்துவீர்களானால் இதற்கு ஒரு அர்த்தம் இல்லாமல் போய்விடும். நீங்கள் இன்று இந்த சபையில் வந்து எழுப்பும் விடயங்கள் எல்லாம் உங்களினால் அங்கீகரிக்கப்பட்டு நிர்வாகிகளினால் செயற்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் ஒன்று விளங்க வேண்டும் தீர்மானங்கள் எடுப்பது நாம், நிறைவேற்றுவது ஊழியர்கள். எமது தீர்மானங்கள் நிறைவேற்றுவதில் ஏதாவது பிரச்சினைகள் இருக்குமானால் அதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் செயலாளர் உட்பட சபையின் ஊழியர்கள். அவர்கள் எமது தீர்மானங்களை செயற்படுத்தும் போது சில தவறுகள் நடந்திருந்தால் அதை அவர்களையும் பாதுகாத்து நிவர்த்தி செய்வது நமது கடமை. வெறுமனே இது பிழை அது பிழை என்று அரசியல் ரீதியாக நாம் இதை பேணுவோமானால் நிச்சயமாக அது அந்த ஊழியர்களையும் பாதிக்கும். இன்று எழுப்பப்பட்ட விடயங்களுக்கு நான் பதில் கொடுத்துக் கொண்டிருக்கும் போது அதோடு வேறு உறுப்பினர்களும் இதில் ஈடுபட்டு கூச்சலிடும் போது இந்த சபையின் கௌரவம். நான் உண்மையாக கவலைப்படுகின்றேன்.

அரசியல் ரீதியாக இன்று பிரிந்து இந்த சபை இவ்வளவு காலமும் நாம் தெளிவோடும், விளக்கத்தோடும் நடாத்தி வந்த சபையை இன்று ஒரு களமாக மாற்றியதற்கு நான் மனவருத்தம் அடைகின்றேன். உங்களுக்கு என்மேல் குற்றச்சாட்டு சுமத்த வேண்டுமோ சுமத்துங்கள், எழுதுங்கள், என்னை இந்த கதிரையில் இருந்து விலக்குங்கள். அது பிரச்சினை அல்ல. ஆனால் இந்த சபையில் இவ்வளவு காலமும் கட்டப்பட்ட காலத்தில் இருந்து இந்த சபையின் கௌரவத்தை பேணுங்கள், நீங்கள் கேள்வி கேளுங்கள் கூச்சலிடாதீர்கள். எல்லோரும் எழுந்து கொண்டு கூச்சலிடும் போது இந்த சபை இந்த நிலைக்கு வந்து விட்டது என்று நான் மனவருத்தம் அடைகின்றேன். அப்படியான ஒரு சபைக்கு தலைமை தாங்குவதற்கு நான் விரும்பவும் இல்லை. அப்படியான ஒரு சூழல் ஏற்படுமானால் நீங்கள் விரும்பியவாறு அம் மாற்றங்களும் ஏற்படுவதில் எந்த தாமதமும் இருக்காது. நான் இன்று இந்த சபையில் இருப்பது இந்த ஊர் மக்களின் விருப்பப் படி, நான் என்ன விடயங்கள் வெளியில் நடந்தாலும் இந்த சபைக்குள் அரசியலை கொண்டு வரவில்லை.

கௌரவ உப தவிசாளர் எழுப்பிய கேள்விகளுக்கு ஊழியர்கள் தொடர்பாக நீங்கள் பகிரங்கமாக கூறியவாறு ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் 03 பேர் என்று எடுப்பதற்கு இன்றய நிர்வாக கட்டமைப்பில் இடம் இல்லை. எல்லாவற்றையும் வெளிப்படையாக நேர்முகப் பரீட்சை நடாத்தி, விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அந்த நேர்முகப் பரீட்சையின் முடிவில் தான் அந்த ஊழியர்கள் எடுக்கப்படலாம், எடுக்கப்பட்டார்கள். இன்று அவர்கள் எடுக்கப்பட்டு ஏறத்தாள 20, 25 மாதங்கள் சென்ற பின் அதில் தெளிவில்லை, இவர்கள் பிழையான முறையில் எடுக்கப்பட்டார்கள் என்று கூறுவது அரசியலுக்காக செய்யும் விளக்கமாக நீங்கள் இவ்வளவு காலமும் சபையில் இருந்து அவர்கள் எப்படி எடுக்கப்பட்டார்கள், அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்று தெரியாது என்று கூறுவீர்களானால் அது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். நீங்கள் மிகவும் தெளிவாக செயலாளரிடம் இருந்து இதன் விளக்கங்களை எடுத்திருக்கலாம். அவ் விளக்கங்களை உங்களுக்கு தருவதில் எந்தவொரு தயக்கமும் எனக்கும் இல்லை, செயலாளருக்கும் இருக்காது. இவர்கள் எல்லோரும் கடமைகளில் இருக்கின்றார்கள்.

இந்த சபை இவ் ஊழியர் தொகை அதிகமானது, ஊழியர்கள் தொகை குறைக்கப்பட வேண்டும் என்று சபை முடிவு எடுக்குமானால் நிச்சயமாக அதை செயற்படுத்தலாம். அதில் எனக்கு தனிப்பட்ட ஆட்சேபணையும் இல்லை. அவர்கள் கடமை புரிகின்றார்கள். இவர்கள் தேவையில்லை என்று நீங்கள் கருதுவீர்களானால், சபை கருதுமானால் அதில் ஆட்குறைப்பு செய்வதில் எந்தவொரு பிரச்சினையும் இருக்காது. இந்த விடயத்தில் முடிவு எடுப்பது சபை. சபையின் தீர்மானங்களை

நிறைவேற்றும் பொறுப்பு தவிசாளருக்கு இருக்கின்றது. அதை நிறைவெற்றும் போது அதிகாரிகள் மூலமாகவே நிறைவேற்றப்படுகின்றது. நேரடியாக தவிசாளருக்கு எதுவும் செய்ய முடியாது. மிகவும் தெளிவாக எல்லாவிடயங்களும் இருக்கின்றது. அண்மையில் கூட செயலாளருடன் நமது வருமான குறைவுகள் வரும் போது எப்படி இந்த செலவுகளை குறைக்கலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் நீங்கள் இதை சுட்டிக் காட்டியது நல்லது. இந்த சபை ஊழியர் தொகை தேவையற்றது, இதில் இத்தனை ஊழியர்கள் குறைக்கப்பட வேண்டும் என்று இந்த சபை தீர்மானம் எடுக்குமானால் நிச்சயமாக அந்த முடிவை எடுக்கலாம்.

அடுத்தது வங்கியில் இருப்பு தொடர்பாக, நான் தவிசாளர் பதவியை இராஜினாமா செய்த பின் நீங்கள் பதில் தவிசாளராக இருந்தவர். நிச்சயமாக எவ்வளவு இருப்பு இருக்கின்றது என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனாலும் இதில் மறைக்க வேண்டிய தேவையும் இல்லை. இது வங்கியில் இடப்பட்ட கணக்குகள். நிச்சயமாக இதன் விபரங்கள் நீங்கள் தெளிவாக என்னிடம் கேட்டறியலாம் அல்லது செயலாளரிடமும் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்து இவ் விபரங்களை எடுக்கலாம். இது எனது சொத்து அல்ல சபையின் சொத்து. இன்று நீங்கள் பெருமைப்பட வேண்டும் மக்களுக்கு கொடுக்க வேண்டிய வைப்புக்கள் 20.2 மில்லியன் உறுதியாக பாதுகாப்பாக வங்கியில் இருக்கின்றது. அது சபையின் பணம் அல்ல மக்களின் வைப்புப் பணங்கள். நான் இந்த சபையை பாரம் எடுக்கும் போது அப்படியான ஒரு தொகை இருக்கவில்லை. ஆனால் நீங்கள் பெருமைப்பட வேண்டும் நமது சபை அந்த நிலையை உருவாக்கியுள்ளது. இன்று எந்த மகனும் எந்த சபையவர்களுக்கு பணம் கொடுக்க வேண்டும் என்றால் அதை பெறுவதற்கு அவர்கள உரிய முறையில் விண்ணப்பித்து அதை பெறக்கூடிய வகையில் அப் பணங்கள் வைக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கு மேலாக இருக்கும் தொகையில்தான் நான் உங்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறினேன். இது சபையில் இருந்து மறைக்க வேண்டிய எந்த தேவையும் இல்லை. காலாகாலமாக இது சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் கூறியவாறு முன்பு தெரிந்தீர்கள். தற்போது நீங்கள் அதை புரிய வேண்டும் என்ற முயற்சியில் இருக்கின்றீர்கள். அதை நான் வரவேற்கின்றேன். நிச்சயமாக ஒவ்வொரு நடவடிக்கைகளும் புரிய வேண்டும். புரிந்து செயற்பட்டால் இப்படியான சூழல் ஏற்படும் போது நீங்கள் புரிந்தவராக ஒரு குற்றச்சாட்டை முன்வைப்பீர்களானால் அது ஒரு பாரிய குற்றமாக வரும். இது நீங்கள் தெரிந்து புரியாத படியால் கேட்டது. நியாயமானது அந்த விளக்கம் தந்தவனாக,

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் உண்மையிலே கேட்டது அந்த மாதிரி வெளிப்படைத் தன்மையாக நாங்கள் ஆட்கள் போட வேண்டும் என்று கேட்கவில்லை. நான் கூறியது என்னவென்றால் அண்மையில் நாம் ஊழியர்களை அழைத்து சில பிழையான நடவடிக்கைகள் நடக்கின்றது என்பதற்காக அவர்களை அழைத்து அறிவுரை வழங்க வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது. நான் சொன்ன விடயம் என்னவென்றால் இந்த ஒழுங்கிற்கு அமைவாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் 03 ஊழியர்கள் தருவது பெரிய ஒரு வேலை இல்லை என்பதைதான் சொன்னேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை நான் விளங்கியவனாகத்தான் உங்களிடம் சொன்னேன். அந்த அடிப்படையில் நாம் நியமனங்கள் செய்ய முடியாது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களை தற்போதும் குறை சொல்லவில்லை, நாளைக்கும் குறை சொல்லவில்லை. அது நியாயமும் இல்லை. கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்களுக்கு தெரியுமா எவ்வளவு வங்கி கணக்கு இருக்கு என்று, கௌரவ உறுப்பினர் இன்பவதிக்கு தெரியுமா? அதைத்தான் சொன்னேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் ஒன்று விளங்க வேண்டும். ஒரு நிர்வாகம் நடத்துகின்ற நேரம் அதன் விளக்கங்கள் உங்களுக்கு தேவையானால், நீங்கள் ஒவ்வொரு மாதமும் பணத்தின் தொகையை சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சமர்ப்பிக்கப்படும். அதில் பிரச்சினை இல்லை. நான் அதை தெளிவாக ஒவ்வொரு தடவையும் சொல்லியிருக்கின்றேன். இந்த வைப்புப் பணம் அதை வைத்து நாம் எந்த தீர்மானமும் எடுக்க முடியாது. அது நமது பணம் அல்ல. அது கொடுக்க வேண்டிய பணம். எஞ்சிய பணம் எப்போதும் வெளிப்படையானது. நீங்கள் வங்கி இருப்பு ஒவ்வொரு மாதமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றால் சமர்ப்பிக்கப்படலாம் அதில் ஒரு பிரச்சினையும் இல்லை. இவ்வளவு காலமும் வேண்டும் என்று சமர்ப்பிக்கவில்லை என்ற கோணத்தில் பார்த்தால் அது பிழை.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாலம் ஒன்று அரச காணியில் தனி ஒருவருக்கு அப்படி உங்களது காலத்தில் போடக்கூடாது. அது வெட்ட வெளிச்சமாக காட்டப்பட்டுள்ளது. அடுத்தது நீங்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், 82 மாதம் ஒரு தவிசாளர். உங்களை ஒருவன் ஏமாற்றி அந்த Digital Board பழையதை கொண்டு வந்து பொருத்துகின்றான் என்றால் அது உங்களுக்கான அவமானம் மட்டும் இல்லை. அது இந்த சபையையும் சாரும். உடனடியாக அந்த Board இனை கழற்றி அதனை திருப்பி அனுப்பி இருக்க வேண்டும். நீங்கள் இனிமேலும் இந்த சபையில் ஊழியர்கள், நிர்வாகிகளை தவறு என்று சொல்ல இயலாது. நாம் என்ன சொல்கிறோமோ அதை செய்ய வேண்டும். நீங்கள் ஒரு நேர்மையான தவிசாளர் நேர்மையான விடயங்களுக்கு இடைஞ்சலாக இருந்தால் அவரை நீங்கள் மாற்ற வேண்டும். அதற்கு நாங்கள் சபை நிற்போம். அப்படி இருக்கும் போது இனிமேல் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற மாதிரி ஊழியர்களின் தலையில் போட்டு தப்பி செல்ல முனைய இயலாது. ஊழியர்களை சரியாக வழிநடத்த வேண்டும். நீங்கள் தவிசாளர் உங்களை கேட்டுதான் நாங்கள் பேசவும் வேண்டும். அது கௌரவம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் ஒரு புறம் என்னை புகழ்கின்றீர்கள், அதே நேரம் மாறி நான் பொறுப்பெடுக்க வேண்டும் என்று சொல்கின்றீர்கள். நிச்சயமாக அந்தப் பொறுப்புக்களை இக் கதிரையில் இருக்கும் வரை மீற மாட்டேன். தவறுகள் நடக்கும் போது நான் சில வேளைகளில் தயங்குவது ஊழியர்களை அதிலும் உயர் ஊழியர்களை பாதிக்கும் என்பதற்காகத்தான். நீங்கள் சுட்டிக் காட்டிய விடயங்களில் தவறுகள் நடந்திருந்தால் அதை நிச்சயமாக நிவர்த்தி செய்வதற்கு நான் உரிய நடவடிக்கை எடுப்பேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களுக்கு எதிராக வாக்களித்தது பகிரங்கமாக உண்மை. ஆனால் உங்களுக்கு எதிரி இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் எதிரியாக பார்க்கவும் இல்லை. தயவு செய்து நடந்தவைகளை விட்டுவிட்டு அதைத்ததான் நான் சொன்னேன் அரசியலை இங்கு கொண்டுவர வேண்டாம். தேர்தல் காலங்களில் நடக்கும் அதன் பின் நாம் சபையாக இயங்க வேண்டும். அதை விட்டுவிட்டு தயவு செய்து வேறு விடயங்களைப் பற்றி இந்த சபையின் நடவடிக்கைகளை முடித்து விட்டு பேசுவோம்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் தற்போது கூறிய 91 ஊழியர்கள் சம்மந்தமாக, தற்போதும் கருதுகின்றேன் சபையை தவறாக வழிநடத்துகிறீர்கள் என்று, நாங்கள் குறிப்பிட்டது 91 ஊழியர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது, சபையினால் அவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. ஆனால் இந்த 91 ஊழியர்களின் கடமைகள் என்ன? செயற்பாடுகள் என்ன என்பதாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
91 ஊழியர்களும் இந்த சபையினால் நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. இந்த சபையினால் ஏறத்தாள 32 பேர் நியமிக்கப்பட்டார்கள். அதற்கு முதல் ஊழியர்களாக இருந்தவர்கள் எஞ்சிய 60 பேர் ஆகும். இந்த சபையினால் நீங்கள் அனுமதி தந்து எடுத்தவர்கள்தான் 32 பேர். அதன் விபரங்கள் எல்லாம் உங்களுக்கு நன்றாக தெரியும். அவர்கள் என்ன என்ன தொழில் செய்கின்றார்கள் என்ற விபரங்களை நிச்சயமாக நீங்கள் செயலாளரிடம் இருந்து பெறலாம். இல்லாவிடில் என்னிடம் இருந்தும் பெற்று அவர்கள் அதற்கு பொருத்தம் இல்லாதவர்கள், அந்த வேலையை செய்யக் கூடாது என்று இந்த சபை கருதுமானால் நிச்சயமாக சபையின் தீர்மானப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது கருத்துக்கள் அவர்களை நீக்க வேண்டும் என்பதல்ல. இந்த 91 ஊழியர்களில் பழைய 60 பேர் தற்போதய 31 பேரும் சேர்ந்து அமைய ஊழியர்களின் கடமைகள், முகாமைத்துவம் ஒழுங்காக இருக்கின்றதா? அவர்களது சேவைகள் முறையாக பேணப்படுகின்றதா? இதில் தான் எங்களுக்கு ஐயம் இருக்க வேண்டுமே தவிர 91 ஊழியர்களையும் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை இல்லை. இதை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். இவர்களது முகாமைத்துவம் சரியாக செய்யப்படுகின்றதா? பணிகள் ஒழுங்காக ஆற்றப்படுகின்றதா? வீதி தொழிலாளியாக எடுத்தவர்கள் குறைந்தது வீதி கடமையில் ஈடுபடுகின்றாரா? அல்லது முக்கிய ஒரு பொறுப்பு கொடுக்கப்படுகின்றதா? பெயரளவில் சம்பளம் பெற்றுக் கொண்டு பொதுமக்களின் வரிப்பணங்களை பெற்றுக் கொண்டு அவர்கள் வேலையில்லாமல் இருந்துவிட்டு போவதற்கு இடம் கொடுக்க முடியாது. ஆகவே ஒவ்வொரு ஊழியர்களும் ஆற்றுகின்ற கடமையை திருப்தியாக இந்த சபை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கான பதிலைத்தான் தர வேண்டுமே தவிர, ஊழியர்கள் கூடுதலாக என்றால் அவர்களை நிற்பாட்டி விடுவோம் என்ற ஒரு கருத்தை தயவு செய்து முன்வைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபை பிழையான வழியில் வழிநடத்த வேண்டிய தேவை எனக்கு இல்லை. ஊழியர்கள் என்ன என்ன சேவையில் இருக்கின்றார்கள். உங்களுக்கும் தெரியும் நீங்கள் உள்ளூராட்சியின் நிர்வாகத்தில் இருப்பவர். இந்த சபைக்கு சிற்றூழியர்களை மட்டும்தான் நியமனம் செய்யலாம். அந்த நியமனங்களில் நமது கோவைகளில் அவர்கள் வேலைத் தொழிலாளி அல்லது சுகாதாரத் தொழிலாளியாகத்தான் இருக்கலாம். ஆனால் அந்த சபையின் தேவைகளுக்கு சிலர் காவலாளர்களாக இருக்கின்றார்கள். சிலர் நூலக உதவியாளர்களாக இருக்கின்றார்கள். சிலர் இந்த சபையின் நிர்வாக வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். 94 ஊழியர்களில் 10 பேர் நாம் இல்லாத காலத்தில் மாகாண சபையினால் நியமித்து அனுப்பப்பட்டவர்கள். அவர்கள் எல்லோரும் O/L, A/L படித்தவர்கள்அவர்கள் நிர்வாக வேலையில் இருக்கின்றார்கள். ஆனால் நமது பதிவுகளில் அவர்கள் சுகாதார ஊழியர்களாக அல்லது வேலைத் தொழிலாளர்களாக இருக்கின்றார்கள். அவர்களின் கடமைகளை விளக்கமாக அறிக்கை ஒன்று ஒவ்வொரு சபை உறுப்பினருக்கும் அனுப்பி வைக்குமாறு செயலாளரை கட்டளை இடுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, செலவீனங்களில் 600 இல் 16வது புத்தகக் கொள்வனவு அமீர் அலி பொது நூலகம் மற்றும் 18வது அமீர் அலி பொது நூலகத்திற்கு புத்தகக் கொள்வனவுக்காக நூலக உத்தியோகத்தர் கொழும்பு சென்ற செலவு ரூபா 11140.00 என்று இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது Travelling Allowance ஆகும். 2250.00 ரூபா வெளியிடுபவர் வந்து கொடுத்து வாங்குகின்ற பிரதிகள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கொழும்பிற்கு சென்று வாங்கிய புத்தகமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இல்லை. அது Travelling Allowance.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 600 இல் 13, 14 அதற்குரிய விளக்கங்களை தந்தால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவைகள் சபையால் செய்யப்பட்டது. இது கொவிட் 19 காலத்தில் செய்யப்பட்ட பழைய செலவுகள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பழைய செலவுகள் என்றாலும் தலைப்பில் 2020.09.01 – 2020.09.30 வரை என்று இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்தக் காலத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மீண்டும் ஒரு தெளிவு Digital Board சம்மந்தமாக, Digital Board இற்கு போதியளவு மின்சாரம் இல்லாமையினால் Transformer வைக்க வேண்டி வரும் என்று கூறினீர்கள். இந்த Transformer இற்கான கொடுப்பனவு யார் செய்வது?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Transformer இற்கான முழுக் கொடுப்பனவும் சபை செய்வதல்ல. Transformer CEB இனால் வைக்கப்படும். வேலைகளுக்கான கொடுப்பனவுகள் சபை மூலமாக செய்ய வேண்டும். இதற்கு மட்டுமல்ல எமது Lift பொருத்துகின்ற நேரமும் இந்த Power தேவைப்படும். இரண்டினையும் கருதித்தான் அந்த Application போட்டிருக்கின்றோம். அது இரண்டுக்கும் தற்போது இருப்பது காணாது.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எந்தளவு கொடுப்பனவு கொடுக்க வேண்டி வரும்?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இன்னும் அந்த Estimate திருகோணமலையில் இருந்து இன்னும் வரவில்லை. இக் கிழமைக்குள் வரலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, செலவீனம் 200 இல் 7வது பொதுச் சுகாதார பரிசோதகருக்கு மேலதிக நேர கொடுப்பனவு ரூபா 11209.00 உள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மடுவத்தில் அவர்கள் 6 மணிக்கு செல்கின்றார்கள். அவர்களின் வேலை 8.30 இற்கு ஆரம்பமாகின்றது. 6 மணி தொடக்கம் 8.30 மணி வரை அவர்களின் மேலதிக நேர கொடுப்பனவினை நாம் கொடுக்க வேண்டும். PHI மார் MOH Office இல் வேலை செய்பவர்கள். அவர்கள் 6 மணிக்கு மாடு அறுக்கின்ற இடத்தில் சென்று 6 மணி தொடக்கம் 8.30 வரை அங்கு வேலை செய்வதற்குரிய கொடுப்பனவு MOH Office இன் உதவியோடு நாம் மாதாந்தம் செய்கின்ற செலவீனங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 100 14வது அலுவலக கணனிகள் பராமரிப்பு கொடுப்பனவு ரூபா 20000.00. இது முதல் மாதமும் வந்தது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது ஒவ்வொரு மாதமும் வரும். அது ஒரு Service Agreement இது சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபை தீர்மானங்களை எடுத்து பார்த்தோமானால் வருட ஆரம்பத்தில் அந்த நிறுவனத்திற்கு பராமரிப்புக்காக என்று தீர்மானம் எடுத்திருப்போம். நீங்கள் தெளிவாக கூட்டறிக்கையை வாசிப்பீர்களானால் அது தெரியும்.

**தீர்மானம் - 04/32/01**
சென்ற மாதம் 2020.09.01 தொடக்கம் 2020.09.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
2021 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்கான Draft உங்களுக்கு தரப்பட்டிருக்கின்றது. அதை நீங்கள் நன்றாக பரிசீலித்து எந்தந்த விடயங்கள் மாற்றுப்படக் கூடியது, வருமானம் கூட்டக் கூடியது என்று நீங்கள் உள்வாங்குவீர்களானால் இந்த மாதத்தின் இறுதிக் கிழமையில் ஒரு நாள் நாம் விசேடமாக ஒன்றுகூடி அதை தயார்படுத்துவதற்கு நாம் முயற்சி எடுப்போம்.

அடுத்தது இறைச்சிக் கடைகள் மற்றும் திறந்தவெளிச் சந்தை என்பவற்றின் 2021 ஆம் ஆண்டிற்கான குத்தகைக்கு விடல் தொடர்பாக, நாம் சென்ற அமர்வில் ஒரு முடிவு எடுத்தோம் கொவிட் பாதிப்பினால் இந்த வருடம் வருமானங்களில் பிரச்சினை இருப்பதனால் சென்ற வருடத்தின் தொகைக்கோ அடுத்த வருடத்திற்கும் நாம் வழங்குவதற்காக அதில் நாம் எந்த தொகைகளை கூட்ட வேண்டும் என்றால் நாம் Tender பண்ணுவதற்கு முதல் அந்த தொகைகளை கூட்ட வேண்டும். அதே நேரம் நாம் Tender பண்ணினாலும் சில வேளைகளில் இதை நடைமுறைப்படுத்தலாமா? என்ற ஒரு கேள்வி வரலாம். ஏனென்றால் மாடு அறுப்பு தடை செய்யப்பட்டால், ஆனால் சட்ட ரீதியாக நாம் இம் முன்மொழிவை செய்யவே வேண்டும். எனது சிபார்சு என்னவென்றால் இன்றய நாட்டின் சூழலில் இதை விட தொகையை எதிர்பார்ப்பது என்பது சாத்தியப்படாத விடயம் என்று நினைக்கின்றேன். அதனால் இந்த வருடத்தின் தொகைக்கோ அடுத்த வருடத்திற்கும் விலைமனு கோருவதற்கு உங்களின் அனுமதியை கேட்கின்றேன். அதில் மாற்றம் செய்ய வேண்டுமானால் அதை மாற்றலாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மாற்ற வேண்டுமானால் முதலில் மாடு அறுக்கலாமா என்று பார்க்க வேண்டும். அந்த வகையில் பார்ப்போமானால் மாற்றம் செய்ய தேவையில்லை.

**தீர்மானம் - 04/32/02**
இறைச்சிக் கடைகள் மற்றும் திறந்த வெளிச் சந்தை என்பவற்றினை 2020 ஆம் ஆண்டிற்குரிய குத்தகைத் தொகைக்கே 2021 ஆம் ஆண்டிலும் விலைமனு கோருவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வீரமுனை பொது நூலகத்திற்கான கல்வெட் மற்றும் கேட் அமைப்பதற்கான தீர்மானம், நீங்கள் ஒரு தனிநபருக்கு இந்த சபை ஒரு கல்வெட் அமைத்து கொடுத்ததாக எனக்கு குற்றச்சாட்டு என்று எடுத்தாலும், அந்த விடயம் செய்யப்பட்டது இரண்டு நோக்கத்திற்காக, ஒன்று அவ்விடத்தில் ஒரு சுய தொழில் ஆரம்பிப்பதற்காக அவர் ஒரு கராச் ஆரம்பிப்பதற்காக அந்த வேண்டுகோளை விடுத்து அவருக்கு சுய தொழில் செய்வதற்காகவும் IDP நிதி மூலம் செய்யப்பட்டது. அதே நூலகத்திற்கும் பாதை. ஏனென்றால் Irrigation Reservation இருக்கின்றது. அந்த Reservation இனை வைத்து அதில் ஒரு பாதை எடுக்கலாம் என்ற எண்ணத்தில்தான் இது செய்யப்பட்டது. அந்த முயற்சி இன்னும் கைவிடப்படவில்லை.

ஆனால் அப் பாதையை எடுக்கும் போது அது நூலக வளவில் ஒரு பாரிய துண்டு ஒன்று செல்கின்றது. ஏனென்றால் இடம் காணாது. அது ஒரு தனிப்பட்ட நபருக்கு என்று கூறுவதில் நியாயமும் இருக்கின்றது. ஆனால் அதை செய்த நோக்கம் அவருக்கு ஒரு சுய தொழில் செய்வதற்கு உதவுவதாகவும், இந்தப் பாவனைக்காகவும். எந்தக் கோணத்தில் பார்த்தாலும் அது பிழை என்று பார்த்தால் பிழையாகத்தான் தெரியும். அந்தக் காலத்தில் அது செய்தது ஒரு சுய தொழில். இன்று அவ்விடத்தில் ஒரு கராச் இருக்கின்றது. முதல் அவ்விடத்தில் ஒன்றும் இருக்கவில்லை. அது செய்து கொடுத்ததனால்தான் இயங்குகின்றது. அதை நீங்கள் என் குற்றம், பிழை என்று சொல்வீர்களானால் இந்த சபை அதை தீர்மானிக்குமானால் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கலாம். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தனி ஒரு நபருக்காக செய்ததை தவறு என்று கூறவில்லை. இதை விட முக்கியமான தேவைகளை இச் சபையில் சுட்டிக்காட்டிய போது பணம் இல்லை என்று கூறி அதனை தட்டிக் கழித்துவிட்டு தனிநபர் ஒருவர் தொழில் செய்ய வேண்டும் என்பதற்காக, இதற்கு அங்கீகாரம் வழங்கி இருப்பது எந்த வகையில் நியாயம் என்று கேட்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது உண்மையாக நான் மனவருத்தப்படுகின்றேன். இது எந்தக் காலத்தில் செய்யப்பட்டது. உண்மையாக வேதனைப்படுகின்றேன். இப்படியான குற்றச்சாட்டுகளை நீங்கள் என்மேல் இன்று சுமத்துவது மிகவும் வேதனையாக இருக்கின்றது. ஏனென்றால் இவை எல்லாம் பொது மனத்தோடு அந்தக் காலத்தில் ஏறத்தாள 20, 23 மாதங்களுக்கு முன் நடந்ததை இன்று அதை எடுத்து நீங்கள் தட்டிக் கழிப்பதை அன்று நீங்கள் எல்லோரும் கேட்டதை எல்லாவற்றையும் இந்த சபையில் இயலுமானவரை செய்தோம். எந்த ஒரு ஒளிவு மறைவும் இல்லாமல் நீங்கள் உங்கள் மனச் சாட்சிகளை தொட்டுப் பார்ப்பீர்களானால் இவ்வளவு காலமும் இக் கதிரையில் இருந்து உங்களுக்கு கட்சி பேதம் இன்றி ஒவ்வொருவருக்கும் எந்த முறையில் என்னால் உதவ முடியுமோ நான் ஒரு தவிசாளர் என்ற ரீதியில் அச் செயல்களை செய்திருக்கின்றேன். அதில் நான் சந்தோசப்படுகின்றேன். அரசியலுக்கு அப்பால் அன்று அது மாறி இன்று எனது ஒவ்வொரு நகர்வும் பிழை கூறும் முயற்சியில் ஈடுபடுவது வேதனைப்படுகின்றேன். உண்மையாக இக் கதிரைக்கு மீண்டும் வந்ததை இட்டு மனவருத்தம் அடைகின்றேன். அது எனக்கு ஒரு பெரிய புகழும் அல்ல, ஒரு சுமையாக இன்று இருக்கின்றது. மனவருத்தமாக இருக்கின்றது. இப்படியான ஒரு சூழலில் நான் இந்த சபையை வழிநடத்த வேண்டுமா? என்ற கேள்வி எனக்குள் எழுகின்றது. அதற்கு நான் விடை தேடுவேன். அதில் சிலர் சந்தோசப்படலாம். ஆனால் அதில் பிரச்சினை இல்லை.

இன்று எமது Slaughter House இல் நமக்கு மாதாந்த நீர்ச் செலவீனமாக ரூபா 25000.00 போகின்றது. இதில் ஒரு Bore Well அமைக்க வேண்டும் என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு விண்ணப்பித்து அவர்கள் பரிசீலித்து இன்று ஒரு Estimate இன்றுதான் எனது கைக்கு வந்தது. அவர்கள் 80 மீற்றர் ஆழத்திற்கு ஒரு Bore Well அடிப்பதாக ரூபா 711668.16 இற்கு Estimate அனுப்பி இருக்கின்றார்கள். இதை நமது நீர்க்கட்டணத்தோடு பார்க்கும் போது 29 மாதங்களில் நாம் கட்டும் தொகையை Water Bill இல்லாமல் இக் கிணரை செய்வோமானால்

நமக்கு பிரயோசனமாக இருக்கும். அந்த Bore Well இனை தேசிய நீர் அமைப்பு சபையினால் செய்வதற்கு உங்களின் அங்கீகாரத்தை கேட்கின்றேன்.

**தீர்மானம் - 04/32/03**

கொல்களத்தின் மாதாந்த நீர் கட்டண செலவினை குறைப்பதற்காக அங்கு தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் மூலம் Bore Well இனை அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/32/04**

சென்ற கூட்டத்தில் அமைக்கப்பட்ட குழுவின் சிபார்சுக்கமைய கீழ்வரும் இடங்களில் புதிதாக இறைச்சிக் கடைகளை திறப்பதற்கான பிரேரணை.

1. தக்கியாப்பள்ளியடி – கண்டியர் கடை, தைக்காப்பள்ளி வீதி பிரதேசம்
2. நாய்க்குட்டியர் சந்தி
3. ஹிஜ்ராபுர சந்தைக் கடை – கொச்சிக்காய்தூளர் சந்தி
4. மீயன்னாட சந்தி இறைச்சிக் கடை – கைகாட்டியடி சந்திக்கு நகர்த்தப்படல்
5. அல் அர்ஸத் பிரதேசம் - இவ்விடம் தற்போது சாத்தியமில்லை

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, வீரமுனை பொது நூலகத்திற்கு கல்வெட் அமைத்தல் விடயம் முன்வைக்கப்பட்டது. அதற்கு தீர்மானம் எடுக்கப்படவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த நூலகம் எல்லோருக்கும் தெரியும். நாம் தெளிவாக இந்த சபையில் கூறிய விடயம் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களின் அமைச்சின் கட்டளையின்படி கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் அவருக்கு வழங்கப்பட்ட 4 மில்லியன் ரூபாவுக்கான வேலைத்திட்டங்கள் எதுவும் செய்யாமல் இந்த வீரமுனை நூலகம் ஆரம்பிக்க வேண்டும் என்று அவரின் முன்மொழிவில் ஆரம்பிக்கப்பட்டு அதன் பின் கௌரவ முன்னாள் அமைச்சர் மீண்டும் வழங்கிய கிட்டத்தட்ட 12 மில்லியன் ஒதுக்கீட்டில் தற்போது பூர்த்தியாகும் நிலைக்கு வந்துள்ளது. நான் கோயில் நிர்வாகத்துடன் அதனோடு இணைந்துள்ள இடத்தையும், நிலத்தையும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன். அவர்கள் அதை பரிசீலிக்கின்றார்கள். அப்படி வரும் போது உண்மையாக அந்த கல்வெட்டையோ பாவிக்க கூடியதாக இருக்கும்.

அந்த வளவையும் எடுத்து அது ஒரு பூங்காவாக மாற்றி அவ் இடத்தில் இந்த சபை பெருமைப்படக்கூடிய, இந்த ஊர் பெருமைப்படக்கூடிய ஒரு இடமாக மாற்றுகின்ற என்னத்தோடு இருக்கின்றேன். இக் கிழமைக்குள் கோயில் நிர்வாகம் அதற்கு ஒரு மறுமொழி தருவதாக, ஒன்று மேற்குப் பக்கம் அல்லது கிழக்குப் பக்கம் இருக்கும் வளவை பெற்றுத் தருவதாக, மேற்குப் பக்கம் பெறுவோமானால் இருக்கின்ற கல்வெட்டையே பாவிக்கலாம். ஆனால் கிழக்குப் பக்கம் அவ் வளவு வருமானால் நாம் இன்னுமொரு கல்வெட்டை நிர்வகிக்க வேண்டி வரும். அந்த கேட்

அமைப்பதற்கும், தேவைப்பட்டால் கிழக்குப் பக்க வளவு கிடைக்குமானால் அதற்குரிய கல்வெட்டை அமைப்பதற்கும் உங்களது அங்கீகாரத்தை கேட்கின்றேன். இதை அமைச்சு மூலமாக எடுப்பதற்கு ஒரு முயற்சி எடுப்போம். தவறும் பட்சத்தில் அதை சபை நிதி இருக்குமானால் நிதி மூலம் செய்வதற்கு உங்களது அங்கீகாரத்தை கேட்கின்றேன்.

**தீர்மானம் - 04/32/05**

வீரமுனை பொது நூலகத்திற்கான கல்வெட் மற்றும் கேற் அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அடுத்ததாக மழை காலம் வருவதால் கல்வெட்கள் திருத்த வேண்டி இருக்கின்றது. இவை எல்லாவற்றுக்கும் இருக்கும் பணம் நான் முன்பு கூறியது போல் ஏறத்தாள 7 மில்லியன் இருக்கின்றது. அதன்படி இதில் எது எது செய்ய வேண்டும் என்று நான் தனியே முடிவு இன்றய சூழ்நிலையில் எடுக்க விரும்பவில்லை. இந்த சபையில் ஒரு குழு இருந்து நீங்கள் தீர்மானியுங்கள் எந்தந்த கல்வெட்டுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று, நீங்கள் தீர்மானித்து எனக்கு தரும் போது சபை அங்கீகாரம் இருந்தாலும் அவ் வேலைகளை எதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை நீங்கள் கள விஜயம் செய்து நீங்கள் தீர்மானம் எடுத்து தரும் போது அதை செயற்படுத்தலாம் என்று நினைக்கின்றேன். அதற்கு கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட், கௌரவ உறுப்பினர்களான எஸ்.நளீம், வை.பீ.எம்.முஸம்மில், ஐ.எல்.நஜீம் நீங்கள் எல்லோரும் ஒவ்வொரு விடயமாக பார்த்து இந்த சபை அங்கீகரித்ததாக எடுத்துவிட்டு ஒவ்வொரு விடயமாக பார்த்து அதை சமர்ப்பிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இவ் விடயத்தில் கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்களையும் உள்வாங்குவது சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் வடிகான்கள் பற்றி அவருக்கு பூரண அனுபவம் இருக்கின்றது. எனவே அவரையும் சேர்த்தால் நல்லது என நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதில் பிரச்சினை இல்லை. கௌரவ உறுப்பினர் அவர்களையும் உள்வாங்கலாம். அவர்களும் இணைந்து தேவையான வேலைகளை முன்னுரிமைப்படுத்தி தரும் பட்சத்தில் இருக்கும் பணத்தில் அதை செய்வதற்கு நாம் முயற்சி எடுப்போம்.

**தீர்மானம் - 04/32/06**

கீழ்வரும் இடங்களில் கல்வெட், வடிகான், பாதை அமைப்பு வேலைகள் செய்வதற்கான பிரேரணை.

1. வடிகான் திருத்தம். சதக்கர் லேன், சம்மாந்துறை – 09
2. கல்வெட், விஸவைத்தியர் வீதி, மலையடி - 03
3. வடிகான் திருத்தம் ஹாஜியார் லேன், சம்மாந்துறை – 09
4. கொங்றீட் வீதி அமைப்பு, ஹிஜ்றா 08ம் வீதி, மட்டக்களப்புத்தரவை – 02
5. கல்வெட் அமைப்பு, பன்னையார் வீதி, மலையடி – 01
6. கல்வெட் அமைப்பு, மரக்காமர் வீதி, கல்லரிச்சல் - 02
7. கல்வெட் அமைப்பு, மல் 14 குறுக்கு வீதி, மலையடிக்கிராமம் - 01
8. சக்தி வீதி – பிரதான வீதி, பழைய வளத்தாப்பிட்டி

9. கல்வெட், மருதமுனையார் வீதி, சென்னல் கிராமம் - 01
10. கல்வெட், தொப்பியர் வீதி, சென்னல் கிராமம் - 02
11. கல்வெட், முகைடீன் மாவத்தை குறுக்கு வீதி, பொது கிணற்றடி, புளக் ஜே கிழக்கு – 01, சம்மாந்துறை.
12. கல்வெட், வைத்தியசாலை 2ம் குறுக்கு வீதி, சென்னல் கிராமம் - 02
13. கல்வெட், புளியடி 2ம் குறுக்கு வீதி, சென்னல் கிராமம் - 02
14. கல்வெட், மல் - 15 1ம் குறுக்கு வீதி, புளக் ஜே மேற்கு – 02
15. வடிகான், மத்திய வீதி, புளக் ஜே மேற்கு – 01
16. வடிகான் அமைப்பு, வண்டு வீதி, புளக் ஜே மேற்கு – 02

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

குறித்த இடங்களை கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட், கௌரவ உறுப்பினர்களான ஐ.எல்.நஜீம், ஏ.எல்.எம்.ஜிப்ரி, எஸ்.நளீம், வை.பீ.எம்.முஸம்மில் ஆகியோர்கள் கொண்ட குழுவினர் கள விஜயம் மேற்கொண்டு முன்னுரிமைப் பட்டியல் சமர்ப்பிக்கவும் இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வாராந்த சந்தை சம்மந்தமாக ஒரு வேண்டுகோள் இன்றய சூழலில் அதைப்பற்றி பேசுவதில் அர்த்தமில்லை என நினைக்கின்றேன். ஏனென்றால் நாம் கூட முடியாத ஒரு நிலையில் ஒரு சந்தையை உருவாக்கும் சூழல் தற்போது இல்லை. இந்த நிலவரம் மாறுமானால் அடுத்த அமர்வில் அதற்கான தீர்மானத்தை எடுக்கலாம்.

இரண்டு கௌரவ உறுப்பினர்கள் 08ம் திகதி அவர்களின் முன்மொழிவுகள் சபைக்கு சமர்ப்பித்திருக்கின்றார்கள். அதை கலந்துரையாடி அதற்கு எம்மால் செய்யக்கூடிய விடயங்களை தீர்மானம் எடுப்போம் என்று நினைக்கின்றேன். கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் அவர்கள் முன்மொழிவுகளை கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வளத்தாப்பிட்டி கிராம வேகர் பிரிவில் உள்ள இஸ்மாயில்புரம் சிறுவர் பூங்காவை புணரமைப்புச் செய்ய வேண்டும். அதில் தளபாடங்கள் இருக்கின்றது அவை பழுதடைந்துள்ளது. அதனை சீரமைக்க வேண்டும் என்று பல முறை இந்த சபையில் பேசி இருக்கின்றேன். இதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர் வருகை தந்து அதற்கான மதிப்பீட்டறிக்கையைச் செய்தார். ஆனால் இன்று வரை அவ் வேலை இடம்பெறவில்லை. என்ன காரணம் என்பது எனக்கு தெரியவில்லை. இனிமேலாவது இதை சபை அங்கீகரித்து அதனை செயற்படுத்தி தர வேண்டும். ஏனென்றால் இஸ்மாயில்புர கிராமத்தில் இருப்பவர்கள் முஸ்லிம் சகோதரர்கள். அவர்கள் என்னை பார்க்கின்றார்கள் நான் ஒரு இனவாதியாக, இவர் முஸ்லிம்கள் என்று எங்களை தேடாமல் இருக்கின்றார் என்று தமிழ் பகுதியில் வேலை செய்கின்றார் என்ற ஒரு கருத்து உருவாகிக் கொண்டிருக்கின்றது. எனவே அதற்கு அடித்தளமாக அமைகின்றது இது தாமதமாக, தயவு செய்து அதனையும் இவ் அபிவிருத்தி திட்டத்திற்குள் செய்து தருவதற்கான ஏற்பாட்டினை இந்த சபை அங்கீகரிக்க வேண்டும்.

அதனைப் போன்று புதிய வளத்தாப்பிட்டி சிறுவர் பூங்காவை புணரமைப்புச் செய்ய வேண்டும். அதில் பாரிய புணரமைப்பு வேலைகள் ஒன்றும் இல்லை. சிறு வேலைகள் இருக்கின்றது அதனைச் செய்ய வேண்டும். அடுத்தது வளத்தாப்பிட்டி, மல்லிகைதீவு, மல்வத்தை, வீரமுனை, கோரக்கோவில், பொது மயானங்களை அளவீடு செய்தலும் எல்லைகள் இடுதலும், காணி அனுமதிப்பத்திரம் பெறுதலும். அதிகமான பொதுக் காணிகளுக்கு அண்மையில் நான் அறிந்து

கொண்டேன் மல்வத்தை சபைக்கு கூட காணி அனுமதிப்பத்திரம் பெறப்படவில்லை. ஆகவே நாம் கடந்து சென்று விடலாம். சபையின் சொத்துக்கள் மக்களின் சொத்துக்கள பாதுகாக்கப்பட வேண்டும். ஆகவே இவற்றுக்கான கடமைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். குறித்த ஒரு சேவயரை கொண்டு அதனை அளவீடு செய்து அதற்கான காணி அனுமதிப்பத்திரத்தினை பிரதேச செயலகங்கள் ஊடாக பெற்றுக் கொண்டு அவைகள் கோவைகளாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். எனவே அதற்கான ஏற்பாடுகளை செய்துதர வேண்டும்.

அடுத்ததாக வளத்தாப்பிட்டி கூட்டுறவுக் கடைக் காணி, பழைய வளத்தாப்பிட்டி கூட்டுறவுக் கடைக் காணி, மல்வத்தை கூட்டுறவுக் கடைக் காணி, வீரமுனை கூட்டுறவுக் கடைக் காணி போன்ற கூட்டுறவுக் கடைக் காணிகள் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட சம்மாந்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்க அமைப்பு கட்டமைப்பு இயங்குவதில்லை. அவர்களின் பொறுப்பில் இருப்பதாக கூறும் கூட்டுறவுக் கடைகளின் பின் கதவுகள் உடைக்கப்பட்டு அதில் உள்ள பொருட்கள் சூரையாடப்பட்டிருக்கின்றது. அதன் எல்லைகள் அபகரிக்கப்பட்டு ஒரு சிலர் தனியார் வீடமைத்து இருக்கின்றார்கள். இதனை பாதுகாக்க முடியாத நிலையில் தான் எங்களது பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் இருக்கின்றது. ஆகவே இவர்கள் இதனை தொடர்ந்து பராமரிப்பார்கள் என்று நிச்சயம் இல்லை. ஆகவே இவ்வாறு எங்கு எங்கு பொது இடங்கள் இருக்கின்றதோ அத்தனையும் எதிர்கால தேவைக்காக பொது இடமாக அடையாளப்படுத்தப்பட வேண்டும். எனவே எமது சபையின் ஊடாக அந்த இடங்களை பொது இடங்களாக அங்கீகரித்தால் எதிர்காலத்தில் அரசினால் நிறைவேற்றப்படுகின்ற பொது வேலைத்திட்டங்களுக்காக அதனை பயன்படுத்த முடியும். அதற்கான அங்கீகாரத்தை செய்ய வேண்டும்.

உதாரணமாக மல்வத்தை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் காணி ஏறக்குறைய 80 பேர்ச் அளவுள்ள காணி அதில் 20 பேர்ச் அளவுள்ள காணி தனிநபரால் அத்துமீறி பிடிக்கப்பட்டு வீடு கட்டப்பட்டு இருக்கின்றது. அவர் அதற்கான பேமிட் முடித்திருக்கின்றார். தற்போது எஞ்சியிருக்கின்ற காணியையாவது பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே இவை அத்தனையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை சபை என்ற அடிப்படையில் முன்னெடுக்க வேண்டும். அதனைப் போன்று பழைய வளத்தாப்பிட்டி சக்தி வீதி என்று உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு கல்வெட் அமைக்க வேண்டும். அதற்கான ஒரு ஏற்பாட்டை செய்யுமாறு கேட்டுக் கொள்வதோடு, வளத்தாப்பிட்டி இஸ்மாயில்புரம் கிராமத்தில் அரச காணிகளில் நீண்ட காலமாக வாழுகின்ற குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்குதல். அண்மைக் காலங்களில் இஸ்மாயில்புர கிராமத்தை பொருத்தளவிலே 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் மீள் குடியமர்த்தப்பட்டவர்கள். அவர்களுக்கு தங்கள் வாழ்ந்த பிரதேசங்களை விட்டு வரும் போது 05 பேர்ச் காணிதான் கொடுக்கப்பட்டது.

அவ்வாறு கொடுக்கப்பட்டவர்களின் காணி ஒரு சிலரின் காணி சற்று பெரிதாக இருக்கின்றது. அல்லது கல் இருந்த காணிகள் வீடு கட்டாமல் கைவிடப்பட்டிருந்தது. அந்த காணிகளை அந்த குடும்பத்தில் இருக்கும் இரண்டாவது பெண் பிள்ளைக்கோ அல்லது மூன்றாவது பெண் பிள்ளைக்கோ அல்லது திருமணம் முடித்த பெண் பிள்ளைக்கோ இவர்கள் வீடு கட்டி அதற்கான அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான வேலைகள் நகர்த்தப்பட்டு வந்தது. ஆனால் அந்த காலகட்டத்தில் இந்த பிரதேசத்தில் இருக்கின்ற அரசியல் பிரதிநிதிகளின் அழுத்தம் காரணமாக அத்தனை பேரும் அப்புறப்படுத்தப்பட்டு நீங்கள் காணி எடுக்க முடியாது. இது உங்களுக்கு சொந்தம் இல்லை என விரட்டப்பட்டார்கள். இன்றும் அம் மக்கள் குறை கூறுகின்றார்கள், நீங்கள் எங்கள் ஊரின் தவிசாளர் எங்களுக்கு இதை செய்து தாருங்கள் என்று, எனவே இதனையும் பிரதேச செயலாளருக்கு விரிவாக எழுதி மக்கள் அத்தனை பேருக்கும் அடையாளம் காணப்பட்டு ஏனெனில் அவர்கள் கல்முனை பிரதேசத்தில் நல்ல சுகமாக வாழ்ந்த மக்கள் சுனாமி அனர்த்தத்தின் பின் இங்கு வந்து தற்போது ஒரு முறையான தொழில் இன்மையால் வறுமையின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு குடியிருக்க கொடுக்கப்பட்ட காணிகளுக்கு மேலதிகமான காணி எங்குமே இல்லாத சூழ்நிலையில் அவர்களுக்கு அருகில் இருக்கும் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

மேலதிகமாக இன்னுமொரு கோரிக்கையை முன்வைக்கின்றேன். எங்களது மல்வத்தை பிரதேசத்திற்கான மின் இணைப்பு சேவை வீரகொட மின் இணைப்பு நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கான மல்வத்தை பிரதேச சபை உறுப்பினர்கள் கடந்த கூட்டங்களில் முன்மொழிவு செய்திருப்பார்கள் என்று நினைக்கின்றேன். அதனை சபை ஊடாக சம்மாந்துறையுடன் இணைத்து தாருங்கள் என்று ஒரு கோரிக்கையை முன்வைத்தோம். சபை ஊடாக எழுதும் பட்சத்தில் நிச்சயமாக மல்வத்தையின் அவசர திருத்த வேலைகள் சம்மாந்துறையினால் செயற்படுத்தப்படும். சம்மாந்துறையின் ஊடாக செயற்படுத்துவதற்கு 5 நிமிடங்கள் போதும். ஆனால் வீரகொடவின் ஊடாக அதை செயற்படுத்தும் போது சிங்கள மொழியில் பேச வேண்டும். முச்சக்கரவண்டிக்கு 300.00 ரூபா, 400.00 ரூபா கொடுத்து செல்ல வேண்டும். வாகன வசதிகள் இல்லை. ஒரு மின் இணைப்பை பெறுவதற்கு கூட நாங்கள் அங்கு செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இவை எல்லாம் எங்களது மக்களுக்கு இலகுவாக செய்து கொடுக்க கூடிய கருமங்கள். ஆகவே இதற்கும் அவதானம் செலுத்துமாறு கேட்டுக் கொண்டு அடுத்த கூட்டத்திலாவது இவ் வேலைத்திட்டங்கள் ஓரளவு முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நிறைவு செய்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, வளத்தாப்பிட்டி கூட்டுறவுக் காணிகள், மல்வத்தை காணிகள் நமது பிரதேச சபையின் கீழ் வருவது போல் SP 19 காணி அதுவும் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் பல முறை சுட்டிக்காட்டப்பட்டு அது நிரந்தரமாக கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றது. அதே போல் சென்னல் கிராமம் - 01 இல் இருக்கின்ற காணியும் MPCS காணி கைவிடப்பட்ட நிலையில் ஆட்கள் ஆக்கிரமிக்கக் கூடிய ஒரு இக்கட்டான நிலையில் அந்த கூட்டுறவு வளவும் இருக்கின்றது. இவ் வேலைகள் முன்னெடுக்கின்ற போது அதையும் உள்வாங்க வேண்டும் என்று கூறியவனாக, அடுத்ததாக சம்மாந்துறை பிரதேச சபைக்கு சொந்தமான வளத்தாப்பிட்டியில் ஒதுக்கப்பட்ட காணி அதன் எல்லைகளை இட்டு எமது கட்டுப்பாட்டுக்கு கீழ் வர வேண்டும். எதிர்காலத்தில் பல தேவைகள் வருகின்ற நேரம் நாங்கள் அதையும் இணைத்து திட்டமிடல் செயற்படுத்த வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் சமர்ப்பித்த விடயங்களில் 1, 2 உங்களுக்கு தெரியும் புதிய வளத்தாப்பிட்டி சிறுவர் பூங்கா நாம் மீண்டும் புணரமைத்த ஒரு சிறுவர் பூங்கா ஆகும். இது இரண்டிலும் இருக்கின்ற பிரச்சினை இதை பராமரிப்பது யார்? அந்தந்த சனசமூக நிலையங்கள் இந்த சிறுவர் பூங்காக்களை பராமரிக்காவிட்டால் நாம் அதை பராமரிப்பதற்காகவே இன்னொரு ஊழியரை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. நீங்கள் கூறியவாறு நமக்கு அப்படியான ஒரு நிலைக்கு வர முடியாது. இங்கு பாவிக்க முடியாத நிலையில் இருக்கும் போது அதில் உள்ள திருத்தங்களை செய்யும் பட்சத்தில் அதை பராமரிக்கும் பொறுப்பை அப் பகுதியில் இருக்கும் இரண்டு சனசமூக நிலையங்களும் எழுத்து மூலம் பாரம் எடுப்பார்களானால் அதை நாம் செய்யலாம். இல்லாவிட்டால் புதிய வளத்தாப்பிட்டி சிறுவர் பூங்கா இரண்டு முறை செய்திருக்கின்றோம். அதை பராமரிப்பாளர் ஒருவரும் இல்லை. நான் பல நேரங்களில் பார்த்து வந்திருக்கின்றேன் அதை பாவிப்பதும் ஒருவரையும் காணவில்லை. ஒன்று அதை அவ்விடத்தை விட்டு அகற்ற வேண்டும் அல்லது அதனை பராமரிக்க வேண்டும். ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் என்று செய்து அதை பராமரிக்க அவ் ஊர் மக்கள் பொறுப்பு எடுக்காவிட்டால் அதை செய்ய இயலாது. அவர்கள் எழுத்து மூலம் இதை நாங்கள் பராமரிப்போம் என்று எமக்கு உறுதிமொழி ஒன்றை பெற்றுக்கொண்டு புணரமைக்கும் வேலைகளை செய்வது உகந்தது என்று நான் நினைக்கின்றேன்.

**தீர்மானம் - 04/32/07**

வளத்தாப்பிட்டி கிராம சேவகர் பிரிவில் உள்ள இஸ்மாயில்புரம் சிறுவர் பூங்கா, புதிய வளத்தாப்பிட்டி சிறுவர் பூங்கா என்பவற்றை புணரமைப்பு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வீ.ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

இதை செயற்படுத்துவதற்கு முன் அப் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்கள் பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் செயற்படுத்துவதற்கு இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மயான பூமிகள் தொடர்பாக, இந்த சபையும், முந்திய சபையும் ஒரு முயற்சி எடுத்தது. மயான பூமியில் இருந்து மையவாடிகளாக இருக்கட்டும், மயானங்களாக இருக்கட்டும் இவை எல்லாம் அரச சொத்துக்கள் அல்லது கோயிலின் சொத்துக்களாகவே காணப்படுகின்றது. வீரமுனை இன்னும் அரச சொத்தாக இல்லை. தெரியாத ஒரு நிலையில் இருக்கின்றது. மல்வத்தை கோயில்கள் எல்லாவற்றுக்கும் எழுதி இருந்தோம் இதை எழுத்து மூலம் எங்களுக்கு பாரம் எடுக்க எழுதச் சொல்லி அப்படி ஒரு வேண்டுகோள் வந்தால்தான் நாம் அதை நமது பிரதேச செயலாளருக்கு இதை பிரதேச சபைக்கு தருமாறு நாம் கூறலாம். அது போல் முஸ்லிம் பகுதிகளில் இருக்கும் மையவாடிகள் எல்லாம் பள்ளிவாசல்களுடன் இருப்பதனால் பள்ளி நிர்வாகம் அதை பிரித்து தருவதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. அதனால் முஹல்லா மஹல்லா மையவாடியை மட்டும் பிரதேச சபைக்கு தருமாறு நாம் எழுத்து மூலம் இதைப்பற்றி சபையில் பேசி இருக்கின்றோம். அந்த முன்மொழிவை செய்திருக்கின்றோம். இந்த கோயில் நிர்வாகங்கள் பிரதேச செயலகத்திற்கு எழுத்து மூலம் இந்த மயானங்களை பிரதேச சபைக்கு கையளிக்குமாறு வேண்டுகோள் விடுத்து கடிதம் தருவீர்களானால் நிச்சயமாக இதை நாம் செயற்படுத்தலாம்.

### தீர்மானம் - 04/32/08
வளத்தாப்பிட்டி, மல்லிகைதீவு, மல்வத்தை, வீரமுனை, கோரக்கோவில், பொது மயானங்களை அளவீடு செய்தலும் எல்லைகள் இடுதலும், காணி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வீ.ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

தற்போது பராமரிக்கப்படும் கோயில் நிர்வாகிகளிடம் இருந்து சம்மதக் கடிதங்கள் பெறப்பட்டு நடைமுறைப்படுத்த இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அடுத்தது பொதுக்கட்டடங்கள் பல முறை முயற்சி எடுத்து இருக்கின்றோம். ஆனால் இந்த கூட்டுறவுத் துறைக்கு சொந்தமான மட்டுமல்ல தபாலகமும் கூட அதை ஒருவரும் பிரதேச சபைக்கு தருவதற்கு முயற்சி அவர்கள் விரும்புகின்றார்கள். இவை எல்லாம் அரச காணிகளாக இருக்கின்றது. அக் கட்டடங்கள் மர்ஹூம் M.H.M.அஷ்ரப் அவர்களின் கடைசி காலங்களில் அவசர அவசரமாக கட்டப்பட்டது. அது யாருக்கு சொந்தம் என்று ஒருவருக்குமே தெரியாது. இதற்கு சபை தீர்மானமாக எடுத்து இவ்விடயங்களை நாம் முன்பும் ஒரு முறை பிரதேச செயலாளருக்கு அறிவித்து இருக்கின்றோம். ஆனால் மீண்டும் ஒரு முறை அதை செயலாளருக்கும் அறிவித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்போம். சக்தி வீதி புதுப் பாதைகள் என்று கூறினீர்கள். அதை அக் குழு பரிசீலித்து அம் முடிவை எடுக்க வேண்டும்.

### தீர்மானம் - 04/32/09
வளத்தாப்பிட்டி கூட்டுறவுக் கடைக் காணி, பழைய வளத்தாப்பிட்டி கூட்டுறவுக் கடைக் காணி, மல்வத்தை கூட்டுறவுக் கடைக் காணி, வீரமுனை கூட்டுறவுக் கடைக் காணி போன்றவற்றை பொது இடங்களாக அங்கீகரித்தலும், பொது இடங்களாக பிரதேச செயலகத்தின் கீழ் கொண்டு வருவது தொடர்பாக பிரதேச செயலாளருக்கும், மாவட்ட செயலாளருக்கும் அறிவிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வீ.ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அடுத்த விடயம் அரச காணிகள் தொடர்பாக, இது எமக்கு அப்பாற்பட்டது. ஆனால் அது மக்களின் பிரச்சினை என்ற ரீதியில் இதில் நடந்த விடயம் என்னவென்றால் பலர் இக் காணிகளை ஒரு காலத்தில் பராமரித்து அதன் பின் எந்தவொரு எல்லையும் இல்லாமல் விடுபட்டு இருந்ததனால் இந்த வீடமைப்பு திட்டங்கள் உருவாக்குவதற்காக நமது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மன்சூர் அவர்கள் ஒரு முயற்சி எடுத்து சில குடும்பங்களுக்கு அதை பிரித்துக் கொடுத்து இதில் பேமிட் பிரச்சினை இவ் ஊரில் இன்றும் ஒரு பாரிய பிரச்சினையாக இருக்கின்றது. வளத்தாப்பிட்டியில் மட்டுமல்ல வளத்தாப்பிட்டி பாதையின் இரு புரங்களிலும் புது வளத்தாப்பிட்டியை தவிர மற்ற எல்லா இடத்திலும் இப் பிரச்சினைகள் இருக்கின்றது. ஒழுங்காக இன்னும் பேமிட் வளவும் இல்லை, அது உறுதியாகவும் மாறவில்லை. இப்படியான விடயங்கள் பேசப்பட்டது என்று நாம் நமது பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வருவோம். CEB விடயமும் நிச்சயமாக அது எந்தளவுக்கு செயற்படுத்தலாம் என்று எனக்கு தெரியாது.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மன்னிக்கவும். மின் மாற்றுவதற்காக நாம் மத்திய அரசிற்கு எழுதுவதை விட மாகாண பிரதி மின் அத்தியட்சகரிற்கு எழுதினால் அங்கீகாரம் பெறப்படும். அதற்காக சபை ஊடாக ஒரு முன்மொழிவை செய்யுமாறு கோரி இருந்தார். இதைப்பற்றி பேசி இருக்கின்றேன். சபை ஊடாக மாகாண பிரதி மின் அத்தியட்சகருக்கு எழுதுவதனால் பெற்றுக் கொள்ள முடியும். அடுத்ததாக கூறிய விடயம் வளத்தாப்பிட்டி இஸ்மாயில்புர காணி தொடர்பாக நாம் கூறுவது 193 வீடுகள் சுனாமி காலத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது. அந்த 193 வீடுகளிற்கும் பிரிக்கும் போது அதன் அருகிலே சில இடங்கள் கைவிடப்பட்டது. அவ்வாறு ஏரக்குறைய 40, 50 துண்டுகள் இருக்கின்றது. அக் காணியை அதற்கு அருகில் இருந்தவர்கள் அதனை சேர்த்து வீடு கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் பலவந்தமாக அப்புறப்படுத்தப்பட்டார்கள். கிராம சேவகர் ஊடாக Notice அடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்கள். ஆனால் அக் காணிகள் இன்னும் அப்படி இருக்கின்றது. இந்த குடும்பத்தில் இருக்கின்ற 3,4 பெண் பிள்ளைகள் வைத்திருப்பவர்கள் அடுத்த பிள்ளைக்கு வீடு கட்ட காணி இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நான் கூறுகின்ற விடயம் அந்தக் காணியை அவர்களுக்குதான் கொடுக்க வேண்டும். அதுதான் நியாயம் எனவே அதற்குரிய சிபார்சுதான் செய்ய வேண்டுமே தவிர மேலதிகமாக பிடித்திருக்கின்ற காணிகளை தேட வேண்டிய அவசியம் இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இஸ்மாயில்புர திட்டத்திற்கு ஒரு வரைபடம் இருக்கின்றது. இது இவர்கள் பிடித்திருப்பது அவர்களுக்கு கொடுத்த எல்லைக்கு அப்பால். அவர்களின் எல்லைகள் எல்லாம் அவ் வரைபடத்தில் தெளிவாக இருக்கின்றது. அதற்குரிய அனுமதிப்பத்திரம் இந்த சபையின் முந்திய சபை வழங்கி இருந்தது. அதற்கு அப்பால் அவர்கள் அவர்களின் எல்லைக்கு அருகாமையில் இருந்த அரச காணியை பிடித்ததனால்தான் இந்தப் பிணக்கு வந்தது. அந்தப் பிரச்சினை அரசியல் மட்டத்தில், நிர்வாக மட்டத்தில் செய்து அக் காணிகளில் அவர்கள் அத்துமீறி பிடித்ததனால்தான் அவர்கள் அதில் இருந்து அகற்றப்பட்டார்கள். நாம் ஒரு சிபார்சு செய்யலாமே தவிர திணிக்க முடியாது. ஏனென்றால் காணி சட்டத்திற்கு கீழ் வருவது. நாம் மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் ஒரு சிபார்சை செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, காணி சம்மந்தமாக போதிய தெளிவு இல்லாத காரணத்தினால் இப் பிரச்சினை வருகின்றது. காணிகள் வீடு கட்டுவதற்கு கொடுப்பதாக இருந்தால் 06 பேச்சஸ் இற்கு மேல் இருக்க வேண்டும். கடைகள் கட்டுவதாக இருந்தால் 5 பேச்சஸ் இற்கு கூடுதலாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் அவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கலாம். அது தவிர தற்போது அரசினால் வழங்கப்பட்ட சுற்று நிருபத்தின் படி ஒருவர் அரச காணியை கையகப்படுத்த வேண்டுமாக இருந்தால் அவர்கள் வருமானம் குறைந்தவராக இருக்க வேண்டும். அதாவது மாதாந்த வருமானம் மிகவும் குறைந்த சமுர்த்தி பெறக்கூடிய பகுதியில்

உள்ளவர்களுக்கு மாத்திரம்தான் அரச காணிகளை வழங்க முடியும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அவர்கள் நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் அவர்கள் பெற வேண்டும். அதுவும் இல்லாதவிடத்தில் கைக்கு பணம் கொடுத்து கொள்முதலுக்கு கொடுத்து அக் காணியை பெற முடியும். அப்படி பல பிரச்சினைகள் உள்ளபடியால் காணிப் பிரச்சினை சம்மந்தமாக நாங்கள் ஒரு முடிவுக்கு வந்து பிரதேச செயலாளருக்கு அறிவிப்பதை விட பிரதேச செயலாளரின் கவனத்திற்கே அதை விட்டால் ஒரு சபை முடிவு இல்லாத மாதிரியே நாங்கள் அது சம்மந்தமாக முடிவு எடுக்க முடியாது. ஏனென்றால் அரச சுற்றுநிருபத்தை மீறி அது ஒரு போராக முடியும். எனவே அரச காணி சம்மந்தமாக இறுதி முடிவு எடுக்கின்ற முடிவு பிரதேச செயலாளருக்கும், மாகாண காணி ஆணையாளருக்கும் தான். எனவே மறைமுகமான முறையிலே செய்யலாமே தவிர இது சம்மந்தமாக நாங்கள் ஒரு முடிவு எடுப்பது அறியாத்தனமான செயலை செய்வதாக அமையும். எனவே அந்த விடயத்தில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என்று பணிவாக வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்கள் கிராம சேவகர் கடமையைத்தான் அவர் ஞாபகம் வைத்திருக்கின்றார். அந்த கட்டமைப்பினை கூறுகின்றார். பொதுவாக அப் பிரதேசத்தின் வட்டாரத்தின் மக்கள் பிரதிநிதி என்ற வகையிலே மக்கள் என்னிடம் கோரிக்கை வைக்கின்றார்கள். அக் கோரிக்கையை நான் எனது உயர் சபையான தங்கள் முன் வைக்கின்றேன். நாம் பிரதேச செயலாளரையோ அல்லது மாகாண காணி ஆணையாளரையோ கட்டுப்படுத்தும் அதிகாரம் அற்றவர்கள்தான். ஆனால் மக்களின் கோரிக்கையாக முன் வைக்கின்றதை நாம் சிபார்சு செய்யும் அதிகாரம் நம்மிடம் இருக்கின்றது. ஆகவே இப் பிரதேசத்தின் பொதுப் பிரச்சினையாக காணப்படும் விடயங்களை ஆராய்ந்து நல்ல திசைக்கு வழிகாட்ட வேண்டுமே தவிர அதற்கு தடை போடுவது நமது கடமை அல்ல. ஆகவே தெரியாத விடயத்தில் கருத்து கூறுவதை தயவு செய்து நிறுத்த வேண்டும் என்பதை தயவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இங்கு நான் கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் ஒரு ஓய்வு பெற்ற அரச ஊழியர். அவர் அந்தப் பகுதியில் கிராம உத்தியோகத்தராக இருந்தவர். அதுவும் காணி விடயங்களில் நல்ல அனுபவம் உள்ளவர். அவர் எடுத்துக் கூறிய விடயங்கள் ஆக்கபூர்வமானவை அவைகளை உள்வாங்கியவர்களாக நாம் நமது முன்மொழிவுகளை அதற்கு ஏற்றவாறு கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் கூறியவாறு மக்களின் பிரச்சினையாக அதை சிபார்சு செய்து அனுப்புவதை விட அதற்கு மேல் நாம் அழுத்தம் கொடுக்க முடியாது என்பது நாம் உணர்ந்த விடயம் ஆகும்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் அவர்கள் கூறியது போல் நான் நினைக்கின்றேன் 300 வீடுகள் தான் Allocate பண்ணப்பட்டு இவ் வீட்டுத்திட்டம் வந்தது. அதற்குரிய Allocation இல்லாத காரணத்தினால் மீதி வீடுகள் கட்டுப்படவில்லை. ஆனால் நிலம் அவ்வளவும் Reserve for the Government Purpose என்று சொல்லி ரெட்குரோஸ் இற்கு வழங்கப்பட்டது. ஆனால் காணி வழங்குவதற்கு முன்னர் அக் காணி சொந்தக்காரர்களாக இருந்தவர்கள் தற்போதும் பேமிட்களை வைத்துக் கொண்டு இடம் தேடி அலைந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலங்கள் ரெட்குரோஸ் இற்கு கொடுத்ததன் பிற்பாடு மீதி நிலமாவது தரவேண்டும் என்று, நான் அறிந்தவரை சம்மாந்துறையைச் சேர்ந்த சிலர் அப் பேமிட்களை வைத்துக் கொண்டு சுற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் இவ் இடத்தில் காடு வெட்டி பல வருடங்களாக மாடு கட்டி அவ் இடத்தில் வாழ்ந்த சரித்திரம் சம்மாந்துறை ஆட்களுக்கு உள்ளது.

அவ்வாறு அவ் இடம் பங்கு பெற்று கொடுக்கும் போது சுனாமி வீடமைப்பிற்கு முன்னர் அந்த இடத்தை யார் பயன்படுத்தினார்களோ அவர்களையும் இனங்கண்டு அவர்களுக்கும் பிள்ளைகள் இருக்கின்றது, அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். அவர்களுக்கும் அதே நேரம் சிபார்சு செய்ய வேண்டும். பக்கத்தில் இருப்பவர்களுக்கு சிபார்சு செய்வதை விட பல வருடங்களாக அவ்

இடத்திலே பராமரித்து தற்போது பிள்ளைகளுக்கு வீடு இல்லாமல் வீதியில் நிற்கின்றார்கள். அந்த இடத்தில் நான் அறிந்தவரை சின்னப்பிள்ளையாக இருக்கும் போது எனது மூத்தப்பா மாடு கட்டிய இடம். அதற்காக நான் எங்களுக்கு இடம் இருக்கின்றது என்று சொல்லவில்லை. அவ் இடத்தில் பராமரித்தவர்கள் சம்மாந்துறையில் ஆட்கள் இருக்கின்றார்கள். பக்கத்தில் இருப்பவர்கள் உரிமை கோரும் போது ஏன் காடு வெட்டி இவ்வளவு காலமும் பராமரித்தவர்களுக்கு இடம் கொடுக்க கூடாது. அப்படி சிபார்சு செய்யும் போது பழைய பேமிட் இருந்தவர்களை பார்த்து அவர்களுக்கும் சிபார்சு செய்ய வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி முன்னாள் GS அவர்கள் கூறியதையும் கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்கள் கூறிய விடயங்களை உள்வாங்கியவனாக, என்னிடம் நேரடியாக தற்போது இருக்கின்ற செயலாளர் அவர்கள் கூறிய விடயம் என்னவென்றால், இந்த அரச காணிகள் அனைத்தும் பிரதேச சபைக்கும், பிரதேச செயலகத்திற்கும் அறியாமல் யாரிடமும் செல்லக் கூடாது என்பதற்கான ஒரு பிரேரணையை நிறைவேற்றி எனக்கு தந்தால், அது ஒரு பாதுகாப்பு மாதிரி இருக்கும் என்று நேரடியாக என்னிடம் குறிப்பிட்டார். முடிந்தால் அந்தப் பிரதேசத்தில் உள்ள இன்னும் பல அந்த மாதிரியான கடிதங்களை எதிர்பார்க்கின்றோம் என்றார். ஆனால் நாங்கள் பிரதேச சபைக்குள் விரும்பிய மாதிரி சட்டம் இயற்றுகின்ற அதிகாரமும் எங்களுக்கு இருக்கின்றது. இந்த காணிச் சட்டத்தை இயற்றலாம், சிபார்சும் செய்யலாம். தற்போது இருக்கின்ற சிக்கல் என்னவென்றால் சிலர் 05 பேச்சஸ்தான் இருக்கு என்றால் ஏற்கனவே நாம் தீர்மானம் எடுத்திருக்கின்றோம் அதை குறைந்தது ஒருவர் மற்றொருவருக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற அமைப்பும் செய்திருக்கின்றோம். எனவே நாம் இந்த சபையால் அழகான முறையில் எங்களிடமும் இப்படியான அரச காணிகள் பெறுகின்ற நேரம் ஓர் அனுமதி பெறுவதற்காக ஏகமனதாக ஒரு தீர்மானம் எடுத்து இருக்கின்றோம் என்பதை பிரதேச செயலாளருக்கு அறிவிக்க வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இக் காணி சம்மந்தமாக 2020.09.10 ஆந் திகதிய வர்த்தமானியில் விளக்கமாக வெளியிடப்பட்டுள்ளது. இக் காணிகள் எவ்வாறு உறுதி பெற வேண்டும், எவ்வாறு பேமிட் பெற வேண்டும், காணி இல்லாதவர்கள் எவ்வாறு காணியை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவ் வர்த்தமானியில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவ் இடத்தை உண்மையாக பிரதேச செயலாளர் அனுமதித்தால் மட்டும் தவிர வேறு யாருமே இதை வழங்க முடியாது. நாங்கள் பிரதேச சபையோ, எங்களது உறுப்பினர்களோ இதற்கு முன் செல்ல இயலாது. இவ் வர்த்தமானி அடிப்படையில் நீங்கள் வேண்டுமானால் இதற்கான சட்டத்தரணி பைசால் என்பவரின் தொலைத் தொடர்பு இலக்கமும் இதில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. அவர் ஊடாக இதை நீங்கள் தொடர்பு கொண்டு இக் காணி விபரத்தை பெற்றுக் கொள்ளலாம் என்பதை இவ் இடத்தில் சுட்டிக்காட்டுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இவ் வர்த்தமானி தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

இதைப் பற்றி நேற்றுதான் கேட்டேன், இது இரத்து செய்யப்படவில்லை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அவ் வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டு மீண்டும் அது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதே நேரம் கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்கள் கூறியவாறு இந்த நிலத்திற்கு ஒரு பழைய சரித்திரம் இருக்கின்றது. என்னிடம் கூட ஒருவர் வந்து அவர் அவரின் தகப்பன் அப் பகுதியில் மாடு கட்டியதாகவும், பிள்ளைகளுக்கு பிரித்துக் கொடுப்பதாக இருந்த காணி Original பேமிட் இன் அடியைக் கூட என்னிடம் கொண்டு வந்து அப்படி ஒரு சரித்திரம் இருக்கின்றது. இது

எல்லாவற்றையும் உள்வாங்கி ஏனென்றால் காணிதான் இன்று உலகத்திலேயே மிகப் பெரிய பிரச்சினைக்குரிய விடயம். எல்லா நாட்டிலும் காணிக்காக யுத்தங்களும் நடக்கின்றது. உங்களுக்கு தெரியும் இஸ்மாயில் புரத்தில் குடியமர்த்தப்பட்டவர்கள் சம்மாந்துறை பிரதேச எல்லைக்குள் இருந்தவர்கள் அல்ல. சுனாமியினால் பாதிக்கப்பட்டு கல்முனை பிரதேசத்தில் இருந்து இங்கு குடியமர்த்தப்பட்டவர்கள். அவர்களுக்கும் உரிமைகள் இருக்கின்றது. அவர்கள் இன்று சம்மாந்துறை தொகுதியின் வாக்காளர்கள் என்று நினைக்கின்றேன். அவர்களுக்கும் அவர்கள் எங்கு இருந்து வந்தாலும் உரிமைகள் இருக்கின்றது. இது எல்லாவற்றையும் உள்வாங்கியதாக எமது நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று கேட்டு, கௌரவ உறுப்பினர் இன்பவதி அவர்கள் அவர்களின் முன்மொழிவுகளை கூறலாம்.

### தீர்மானம் - 04/32/10

வளத்தாப்பிட்டி இஸ்மாயில்புரம் கிராமத்தில் அரச காணிகளில் நீண்ட காலமாக வாழுகின்ற குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு பிரதேச செயலாளரிற்கு சிபார்சுக் கடிதம் அனுப்புவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வீ.ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/32/11

மல்வத்தை பிரதேசத்திற்கான மின் இணைப்பு சேவை நிலையம் தற்போது வீரக்கொடவில் அமைந்துள்ள அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதனை சம்மாந்துறை மின்சார சபை அலுவலகத்தின் கீழ் செயற்படுத்துவது தொடர்பாக மாகாண பிரதி பொது முகாமையளருக்கு கடிதம் எழுதுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வீ.ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எம். இன்பவதி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை பொதுநூலக வேலி மற்றும் முன்பகுதிக்கு கொங்றீட் இடுவதற்கு விபுலானந்தா சனசமூக நிலையத்தில் இருந்து பணத்தை எடுத்து வேலை செய்ய அனுமதி வழங்குமாறு சபையில் கேட்டுக் கொள்கின்றேன். அத்தோடு மல்வத்தை இலங்கை வங்கிக்கு அருகே கல்முனை செல்லும் பயணிகளிற்காக பிரயாண தரிப்பிடம் அமைத்தல். இந்த இடத்தில் முதியோர்கள், சிறுவர்கள், கற்பிணி தாய்மார்கள் போன்றவர்கள் மிகவும் அவஸ்த்தை படுவதை கண் ஊடாக கண்டேன். மழை நேரங்களிலும், வெயில் நேரங்களிலும் நிற்பதற்கு இடம் இல்லாமல் மிகவும் கஸ்டப்படுகின்றார்கள். அத்தியவசிய தேவையாக இந்த இடத்திற்கு பிரயாண தரிப்பிடம் ஒன்றை அமைத்து தருமாறும் சபையினுடைய அனுமதியை கேட்கின்றேன். அடுத்ததாக மல்வத்தை ஆலயம் முன்பாக அம்பாறை செல்லும் பிரயாணிகளிற்காக பிரயாண தரிப்பிடம் அமைத்தல். அங்கு பாடசாலை மாணவர்கள் பாடசாலை விடுகின்ற நேரம் அவ்விடத்தில் இருந்து 100 மீற்றர் மல்வத்தை சந்திக்கு வந்துதான் அவர்கள் பிரயாணத்தை மேற்கொள்கின்றார்கள். அதையும் சபையிடம் அனுமதி கேட்கின்றேன்.

மல்வத்தை சந்தியில் உள்ள கடைத் தொகுதியை திருத்தம் செய்தல். வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் வழிமுறைகளில் ஒன்றாக இந்த கடையை திருத்தி கடை இயங்குவதற்கான அனுமதியையும் சபையிடம் கேட்டுக் கொள்கின்றேன். அடுத்ததாக மல்வத்தை பிரதேச முதியோர்களை கௌரவிக்கும் முகமாக முதியோர்தின நிகழ்வு நடாத்துதல். அத்துடன் மல்லிகை தீவுக்கு தற்போது வழங்கும் குடிநீர் பற்றாக்குறையாக உள்ளமை. மேலும் ஒரு நீர்த்தாங்கி

வழங்க வேண்டும் என்று இந்த சபையிடம் கேட்டுக் கொள்கின்றேன். இந்த மல்லிகை தீவில் கிணற்றில் இருக்கின்ற நீரை கூட பாவிக்க வேண்டாம் என்று சுகாதார தரப்பினர் தெரிவித்து இருக்கின்றார்கள். அந்த மக்கள் நாங்கள் வழங்குகின்ற ஒரு பவுசர் குடிநீரை கொண்டு குடிக்க மட்டும் பயன்படுத்துகின்றார்கள். சமைப்பதற்கு அவர்களுக்கு நீர் இல்லை. அதை உடங்கா வாய்க்காலில் தோன்டி நீர் எடுத்து சமைப்பதை கண்ணால் கண்டேன். அந்த மக்களின் தேவைக்காக 02 தாங்கிகளை வாரத்திற்கு ஒரு தடவை வழங்குமாறும் இந்த சபையின் அனுமதியை கேட்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை உப அலுவலகத்தில் இருந்த பாலர் பாடசாலை கட்டடம் எமது சபை நிதியின் ஊடாக கட்டம் கட்டமாக புணரமைக்கப்பட்டு இறுதியில் பாலர் பாடசாலை இடம் பெறாத சூழ்நிலையில் தற்போது நூலகமாக மாற்றப்பட்டு அதற்கான வேலைகள் செய்யப்பட்டுள்ளது. அதற்கான முன் வராண்டா தொகுதி அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த நிலத்திற்கு கொங்கிறீட் இடப்படவில்லை. அதற்கான நிதியை பெறுவதற்கு சபை ஊடாக முயற்சிகள் செய்தோம். சபையில் போதிய நிதி இல்லாத சூழ்நிலையிலே எமது சனசமூக நிலையத்தின் பங்கும் இருக்க வேண்டும் என்பதற்காக சனசமூக நிலையத்திடம் அதை செய்து தருமாறு கோரினோம். அதற்கமைவாக அதுவும் அதே போன்று மல்வத்தை உப அலுவலகத்தின் வேலிக் கட்டமைப்பும் யானைகள் உடைக்கப்பட்டுள்ளது. ஒரு மன வருத்தத்திற்குரிய செய்தி நேற்று இரவு கூட மல்வத்தை சந்தையில் இருக்கும் எமது 03 கடைகளை யானை உடைத்துள்ளது. அது வேதனைக்குரிய விடயம் அப்படி அதற்கான வேலியை திருத்துவதற்காக ரூபா 280000.00 அதற்கான மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது.

அதற்கு நாங்கள் முதலாம் கட்டமாக CDO இடம் அனுமதியை கோரினோம். அதற்கான அனுமதியை செயலாளர், தவிசாளர் அனுமதி தர வேண்டும் என்று கூறினார். உங்களிடம் நாங்கள் முன்வைத்தோம். அவர்கள் அதனை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அனுமதி வேண்டும் என்று கூறினார். தற்போது உள்ளூராட்சி ஆணையாளர் குறிப்பிட்டிருக்கின்றார் சனசமூக நிலையத்தின் சொத்தை நாங்கள் சபைக்கு வழங்க முடியாது. இருந்தாலும் உங்களின் வேண்டுகோளின் பிரகாரம் சபையில் சமர்ப்பித்து சபை அங்கீகாரம் தந்தால் நான் அதற்கான அனுமதி வழங்குகின்றேன். இது மோசமான முன்னுதாரணமாக இருந்து விடக்கூடாது என்பதை அவதானமாக இருக்க வேண்டும் என்ற கருத்தை கூறினார். எனவே தற்போது சனசமூக நிலையத்தில் இருக்கும் 480000.00 ரூபா நிதியில் இருந்து 280000.00 ரூபா நிதியை 02 வேலைகளுக்கும் பெறுவதற்காக முதலாவதாக அங்கீகாரம்.

இரண்டாவதாக எமது மல்வத்தையில் வழமையாக இருந்து வந்த பிரயாணிகள் பஸ் தரிப்பிடம் உடைந்து சிதைந்திருக்கின்றது. வீதி திருத்தும் வேலையின் போது அது முற்றாக அகற்றப்பட்டுள்ளது. இன்று மல்வத்தை சந்தியில் கல்முனைக்கு வருபவர்கள் மஜீட் புரத்தில் இருந்தோ, மல்வத்தையில் இருந்தோ, எங்கு இருந்து வருபவர்களும் அவ் இடத்தில் வெயிலிலே நின்று கொண்டிருக்கின்றார்கள். இதற்காக பஸ் தரிப்பிடம் அமைக்க வேண்டும். நான் இதற்கு முன்னர் இடம்பெற்ற ஒரு சில சபைகளில் முன்மொழிந்திருக்கின்றேன். ஆனால் அது நிறைவேற்றம் செய்யப்படவில்லை. தற்போது எதிர்வரும் காலங்களில் மழை காலம் என்பதால் மக்கள் இன்னும் அவதிப்படுவார்கள். எனவே இரண்டு இடங்கள் முன்மொழியப்பட்டுள்ளது. இரண்டு இடங்களுக்கும் நிச்சயமாக பஸ் தரிப்பிடம் அமைத்துக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் வருமானம் பெறக்கூடிய மல்வத்தை சந்தியில் பழைய கடைகள் 03 இருக்கின்றது. உரிமையாளர் கடையை திருத்தித் தாருங்கள் என்று கடிதம் தந்திருக்கின்றார். அதன் கூரைகள் வெடித்திருக்கின்றது அதை திருத்தித் தந்தால் நான் நடைமுறைப்படுத்துவேன் என்று, ஆகவே 03 கடைகள் இருக்கின்றது அதற்கான திருத்தியமைப்பு செய்யும் போது நமது சபைக்கும் குறிப்பிட்ட வருமானம் வரக்கூடியதாக இருக்கும்.

மல்லிகை தீவிற்கு தற்போது வாராந்தம் குடிநீர் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். நாம் நிரந்தர நீர் இணைப்பை பெறுவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்ற செய்தியை எத்திவைக்கின்றேன்.

இவைகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களாக இருப்பதனால் அங்கீகாரத்தை தர வேண்டும். அதற்கு மேலதிகமாக சனசமூக நிலையத்தில் இருந்து பணம் எடுப்பதற்கு மேலதிகமாக சபையினால் நிறைவேற்றிக் கொடுக்க முடியுமானால் 280000.00 ரூபா மதிப்பீட்டு வேலை இதனை உள்வாங்கி செய்து தந்தால் சிறப்பாக இருக்கும். மல்வத்தை உப அலுவலகத்திற்கு செய்யும் ஒரு கடமையாக கருதமுடியும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்லிகைதீவு குடிநீர் விடயம் தொடர்பாக பேசப்பட்ட போது இது ஒரு மிக நீண்ட நாள் பிரச்சினையாக இருக்கின்றது. ஆனால் மல்லிகைதீவு ஊர் என்பது ஒரு விவசாயம் செய்யக்கூடிய நிலங்களை நாலா பாகமும் கொண்டது. இந்தப் பிரதேசத்தில் குடிநீர் மாசடைந்திருப்பதாக நாம் அறிந்திருக்கின்றோம். எனவே இன்று குழாய் நீர் மூலம் மக்களுக்கான குடிநீரை வழங்குவது என்பது மிக இலகுவான திட்டம். தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையை பொருத்தவரையில் மல்வத்தை சந்தியில் இருந்து மல்லிகை தீவிற்கு செல்லுகின்ற தூரம் 3 கிலோ மீற்றர். அதே போன்று நைனாகாட்டிலே இருந்து குடிநீரை கொண்டுவருவதற்கு ஏறத்தாள 1 ½ கிலோ மீற்றர் தூரம்தான். இவ்வாறான தூரத்திற்கு குழாய் நீர் பொருத்துவது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சட்டங்களை பொருத்தவரையில் மிக இலகுவாக செய்யக்கூடிய ஒரு திட்டம். ஆனால் சம்மந்தமாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிழக்கு பொது முகாமையாளருக்கு நாங்கள் இந்த சபையின் ஊடாக ஒரு தீர்மானத்தை எடுத்து எத்தி வைத்தாலே இந்த தூரத்திற்கான குழாய் நீரை பொருத்துவதற்குரிய பணத் தொகையினை கிழக்கு பொது முகாமையாளராலே ஒதுக்க முடியும்.

அவ்வாறு இருக்கையில் இன்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை புதிய ஒரு திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. குடிநீர் இணைப்பை பெறுவதற்கு குழாய்கள் இல்லாத பிரதேசங்களில் அப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள் குடிநீர் இணைப்பை பெறுவதற்காக பணத்தை செலுத்துவார்களானால் சபையினால் இலவசமாக குழாய் நீரை பொருத்திக் கொடுக்கின்ற திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. எனவே இது சம்மந்தமாக நாங்கள் அம்பாரையில் இருக்கின்ற பிரதிப் பொதுமுகாமையாளரையும், திருகோணமலையில் இருக்கின்ற கிழக்கு பொது முகாமையாளரையும் இந்த சபையினுடைய தீர்மானமாக எடுத்து அறிவித்தால் இப் பிரச்சினைக்கு மிக இலகுவான தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ் விடயங்கள் மல்வத்தை பொது நூலக வேலிப்பகுதி, கொங்றீட் இடுவதற்கும் இது கொள்கை ரீதியாக எனக்கும் உடன்பாடு இல்லை. ஏனென்றால் சனசமூக நிலையத்திற்கு நாம் வருமானம் பெறக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்வது அவர்கள் சமூகத்திற்கு அவர்கள் பங்களிக்க வேண்டும் என்று, அதை மீண்டும் சபைக்கு சபையின் வளங்களை பெறுமதியை கூட்டுவதற்காக வழங்குவது உகந்ததல்ல என்பது சரி என்று நினைக்கின்றேன். ஏனென்றால் அதை செய்யக்கூடாது. ஆனால் வேலி அமைப்பதற்கும் கொங்றீட் இடுவதற்கும் சபை நிதியத்தில் இருந்து செய்வதற்கு உங்களின் அங்கீகாரத்தை கேட்கின்றேன். ஆனால் அந்த சனசமூக நிலையம் முதியோர் தினம் போன்ற மற்ற விடயங்களுக்கு அப் பணத்தை செலவளித்து ஏனென்றால் சபையின் சொத்துக்கு சபையினால் பெற்ற வருமானத்தை திருப்பி செய்வது என்பது பொருத்தம் இல்லாத விடயம். மற்ற விடயங்களுக்கு பாவிக்கலாம்.

**தீர்மானம் - 04/32/12**
மல்வத்தை பொது நூலக வேலியினை சபை நிதி மூலம் சனசமூக நிலையத்தினூடகாவும் மற்றும் முன்பகுதிக்கு கொங்ரீட் இடுவதற்கு சபை நிதியில் இருந்து சபை ஊழியர்களை பாவித்து அவ் வேலையினை செயற்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வீ.ஜெயச்சந்திரன் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பிரயாண தரிப்பிடம் தொடர்பாக, அது உண்மையாக நீர் வழங்கல் சபை Pipe line செய்யும் போது உடைக்கப்பட்டது. அவர்கள் அதை மீண்டும் அமைக்க வேண்டும் என்று அந்த நேரம் ஒரு ஒப்பந்தம் இருந்தது. ஆனால் மீண்டும் அமைப்பதில் அந்தக் காலம் வரும் போது சபை இயங்கவில்லை. நான் அறிந்த விடயம் என்னவென்றால் மீண்டும் அந்த இடவுக்குள் அமைப்பதற்கு RDA அனுமதி கொடுக்கவில்லை. ஏனென்றால் பாதை ஓரம் என்று, இதற்கு ஒரு மாற்றுவழி இருக்கின்றது. ஆனால் கோயிலுக்கு முன் உள்ளது பிரச்சினை இல்லை. தபால் அலுவலகத்திற்கு அருகில் இடம் காணாது. அதே இடத்தில் தான் எமது 03 கடைகள் இருக்கின்றது. 03 கடையின் கடையறைகள் சம்பூரணமாக அழிந்து இருக்கின்றது. அதை திருத்துவது என்றால் ரூபா 630000.00 தேவைப்படும். அதில் வருகின்ற வருமானம் நான் நினைக்கின்றேன் ரூபா 150.00 அதன் வாடகை. அதில் மிச்ச நாளாக வியாபாரம் நடக்கவில்லை.

அவர்கள் அந்த இடத்திற்கு வாடகை செலுத்தி இருந்தால் அந்த வாடகையை மீண்டும் அவர்களுக்கு கொடுத்துவிட்டு அந்த இடத்தில் ஒரு நவீன பஸ் தரிப்பு நிலையம் நாம் உருவாக்குவோமானால் ஏனென்றால் அந்த கட்டடத்திற்குள் ஒன்றும் கட்ட இயலாது. அது Street line இற்குள் வருகின்றது. அது Main Road அதில் இருந்து 50 அடிக்குள் என்று சொன்னால் அவ்விடத்தில் சட்டபூர்வமாக அகற்ற இயலாது.இருக்கின்ற கூரையை செய்வது என்றால் ரூபா 630000.00 தேவைப்படும். அதை மரத்தால் செய்ய இயலாது. இரும்பால் செய்ய வேண்டும். அதை செய்வதா? அல்லது இதை மாற்றுவதா? என்பதை சபையில் முடிவு எடுக்க வேண்டும். அதை மாற்றுவோமானால் பாதுகாப்பாக ஒரு பஸ் தரிப்பு நிலையமாக செய்துவிட்டால் பிரச்சினை இல்லை. அதை திருத்துவது என்றால் இவ்வளவு பணமும் செலவளிக்க வேண்டும். அவ் இடத்தில் செய்ய இயலாது. கோயில் பக்கத்தில் பிரச்சினை இல்லை. அல்லது பஸ் தரிப்பு நிலையத்தை சந்திக்கு வந்தால் அதுவும் RDA அனுமதிக்காது. வங்கியை கழித்து வந்தால் APC அவ்விடத்தில் அகலமாக இருக்கும். அப் பகுதி கௌரவ உறுப்பினர்கள் கருத்துக்கள் கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் ஆர்.வளர்மதி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, வங்கிக்கு அப்பால் பழைய கூட்டுறவு அருகில் சாத்தியப்படாது. ஏனென்றால் அவ் இடம் தூரம். வங்கிக்கு வருகின்ற மக்கள், சந்தைக்கு வருகின்ற மக்கள், மஜீட் புர மக்கள் எல்லோருக்கும் பயனுள்ளதான இடம் அவ்விடம்தான்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நான் எங்களது மல்வத்தை சந்தி மற்றும் மல்வத்தை பாடசாலை முன்பாக பழைய வளத்தாப்பிட்டி பாடசாலைக்கு முன்பாக இருந்த பிரயாண தரிப்பிடம் உடைக்கப்பட்டுள்ளது. அவ்விடத்தில் ஆசிரியர்கள் நின்று கொண்டிருக்கின்றார்கள். அதே போன்று புதிய வளத்தாப்பிட்டி அம்பாறை நோக்கி செல்வதற்காக ஒரு பஸ் தரிப்பிடம் 05 பஸ் தரிப்பிடங்கள் எனது தனிப்பட்ட கடித தலைப்பில் எழுதி நிறைவேற்று பொறியியலாளர் கல்முனைக்கு அனுப்பி கடந்த வாரம் அவர்கள் இந்த இடங்களை பரிசீலித்து இடம் ஒதுக்கி தந்துள்ளார்கள். இந்த இடங்களில் அமையுங்கள் என்று, வங்கிக்கு முன்னாக 2 கடையறைகளுக்கு மத்தியில் அவர்கள் 06 அல்லது 08 அடி அகலம் கொண்டதாக வேலியுடன் சேர்ந்த மாதிரி கானின் கட்டமைப்பை உயர்த்திவிட்டு அமைக்குமாறும், மூன்றாவதாக பழைய வளத்தாப்பிட்டி பாடசாலைக்கு முன்பாக அமைப்பதற்கும் அனுமதி தந்துள்ளார். எனவே அதற்கான முறையான எழுத்து மூல அனுமதி தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. நாம் அதற்காக நிதியை ஒதுக்கினால் அவர்கள் அதற்கான பூரண அங்கீகாரத்தை தந்து நாம் அதற்கான கடமையைச் செய்யலாம். ஆகவே அது எமக்கு தடையல்ல.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பஸ் தரிப்பு நிலையத்திற்கு எவ்வளவு வரும் என்று Estimate செய்து பார்த்து அதற்குரிய நடவடிக்கை எடுப்போம்.

**தீர்மானம் - 04/32/13**

மல்வத்தை இலங்கை வங்கிக்கு அருகே கல்முனை செல்லும் பயணிகளுக்காக பிரயாண தரிப்பிடம் பழைய வளத்தாப்பிட்டி பாடசாலை முன்பாகவும் மற்றும் மல்வத்தை ஆலயம் முன்பாக அம்பாறை செல்லும் பிரயாணிகளுக்காக பிரயாண தரிப்பிடம் அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வீ.ஜெயச்சந்திரன் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை உறுப்பினர்களிடம் விணயமாக வேண்டிக் கொள்வது, இப்போது வேலி அமைத்து தந்தால் அதை பூரண பாதுகாப்புடன் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் பயிரிடலாம். அடுத்தது அவ்விடத்தில் நீங்கள் இனிமேல் யாரையாவது ஒரு பொறுப்புதாரியாக நியமிக்க வேண்டும். ஏனென்றால் நிறைய கன்றுகளையும், பயனுள்ள மரங்களையும் நாட்டக்கூடிய பகுதி அந்தப் பிரதேசம். இவ்வளவு காலத்திற்கு ஒரு கன்று அல்லது ஒரு மரத்தையாவது உருவாக்கியதாக காணவில்லை. மரத்தை நாட்டினால் நிச்சயமாக நாம் நாட்டியது என்று சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கும். எனவே அங்கு 02 கௌரவ உறுப்பினர்கள் இருக்கின்ற வகையில் அதை பாதுகாக்க வேண்டும். அப்படி சௌபாக்கியா திட்டத்தில் வேலி அமைத்து அந்த Estimate இல் தற்போதே கடல் வலையை போட்டால் ஆடு கூட வராமல் பாதுகாக்கலாம்.

இன்னுமொரு விடயத்தை இவ்விடத்தில் சுட்டிக் காட்ட வேண்டும். அங்கு தற்போது கழற்றுகின்ற கட்டைகளும் வேலிகளும் பயனுள்ளதாக மறு முனையில் பாவித்து அதையும் மீதப்படுத்த வேண்டும். அடுத்தது வளத்தாப்பிட்டியில்கூட யானை வரும் உடைக்கும் அதை நாம் எதிர்பார்க்க இயலாது. மீண்டும் அவ்விடம் நிர்மானம் செய்யப்பட்டு பொது மக்கள் செல்லுகின்ற போது அழகான பார்வையில் இருக்க வேண்டும். அதற்கு அந்தந்த பிரதேசத்தில் இருக்கின்றவர்களின் பங்களிப்பும் தேவை. ஏனென்றால் பஸ்ஸில் செல்பவர்கள் இந்த பூங்காவையும் பார்த்துவிட்டு வளத்தாப்பிட்டி, மல்வத்தையில் இருப்பதையும் பார்த்துவிட்டு குறை சொல்லக்கூடாது. எல்லாம் ஒரு பிரதேச சபைக்குள் தான் இயங்குகின்றது. எனவே நாங்கள் இவ் விடயத்தில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து அலங்கரிக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சௌபாக்கியா திட்டம் என்று கூறாமல் மற்ற வேலைகளை செய்யலாம். ஏனென்றால் சௌபாக்கியா திட்டம் என்று கூறி இப் பிரதேச சபையின் பணத்தை நட்டப்படுத்தியதுதான் மிச்சம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இவ் விடயத்தில் கௌரவ உப தவிசாளர் அவர்கள் தட்டிச் சென்றதால் இவ் விடத்தில் ஞாபகம் ஊட்டுகின்றேன். மல்வத்தை உப அலுவலகம் என்பது எமது பிரதேச சபையின் ஒரு தாய் சபையின் பிள்ளையாக இருந்து தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கடந்த காலங்களிலே அது கிராம சபையாக இருந்து உப சபையாக இருக்கும் போது அதில் 14 உத்தியோகத்தர்கள் கடமையாற்றினார்கள். இறுதியாக பாக்கியராஜா முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தராக இருந்து செயற்படுத்தினார். அவருக்கு கீழ் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வாராந்தம் PHI, நூலக உத்தியோகத்தர்கள் இப்படி பலர் வந்து கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள். 2011, 2015 சபை காலத்தில் இதற்கான வேலைத்திட்டங்கள் நடந்தது. இடையிலே இருந்த கால கட்டத்தில் இந்த அலுவலகத்திற்கு நடந்தது என்னவென்று தெரியாது. தற்போது பொறுப்பு அதிகாரி இல்லை, நூலகர் இல்லை, இருக்கின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அங்கு வருவதில்லை. இவ்விடயங்கள் சம்மந்தமாக கடந்த ஒரு அமர்வில் பேசியதற்கிணங்க அபிவிருத்தி பட்டதாரி பயிலுனர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு தான் வந்த துறைக்கு எந்தவித அனுபவமும் இல்லை. அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆகவே அவர் எந்தக் கடமையும் செய்வதில்லை. இந்த அலுவலகத்தை குறைந்தது அங்கே நீரிணைப்பு பெறுவதற்கான அனுமதி மதில்கள் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். எமது சபையின் அருகிலே அத்திவாரம் போட்டு மதில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவ் வளவிற்கான அனுமதி பெறாமல் கட்டப்பட்டு கொண்டிருக்கின்றது. யார் சென்று கேட்பது? எவர் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இல்லாததால் அவர்கள் விரும்பியவாறு கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். தற்போது சபையால் நிறுத்தப்பட்டு கொண்டிருக்கின்றது. ஆகவே இவற்றை ஆராயும், இவற்றுக்கு அனுமதி வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. அது முற்று முழுதாக கைவிடப்பட்டிருக்கின்றது. எமது சபையின் ஊடாக அன்றாடம் மல்வத்தை பிரதேச சபையின் வரிகளை அறவீடு செய்து அதனை வைப்பு செய்வதற்கு 2 கணக்குகள் மல்வத்தை உப அலுவலகத்தின் பெயரிலே இருந்தது. தற்போது கணக்கில் இருக்கின்றதா என்பது எனக்கு தெரியாது. ஆகவே கட்டம் கட்டமாக சபையின் நடவடிக்கைகள் மழுங்கடிக்கப்படுகின்றதே தவிர அது மெருகேற்றப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயம்.

இது சம்மந்தமாக செயலாளரிடம் கூறினேன் குறைந்தது வாரத்திற்கு ஒரு தடவையாவது வந்து பாருங்கள் என்று, அவர்கள் 07 பேர் தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு என்ன பொறுப்பு என்ன கடமை என்று தெரியாது. பத்திரிகை எடுத்துக் கொண்டு வருபவர் பத்திரிகையை போடுகின்றார். நூலகர் நூலகத்தையும், பொதுப் பூங்காக்களையும், சந்தைக் கடமைகளையும் பார்க்கின்றார். இருக்கின்ற பிள்ளைகள் ஒரு சில நேரத்தில் இருக்கின்றார்கள். அதற்கு மேலதிகமாக எந்த கடமையும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. நாம் ஒரு கணனியை செய்து கொடுத்தோம் நீங்கள் தேவையான நடவடிக்கைகளை செய்யுங்கள் என்று, Road Inventory தயாரிக்க சொல்லி அந்த Inventory இனை சபை ஊடாக தயாரித்து சபை உறுப்பினர்களுக்கு உதவி செய்யுங்கள் என்று, அதைக்கூட செய்வதற்கு தெரியவில்லை. ஏறத்தாள 06 மாதங்களாக கணனி மூடி வைக்கப்பட்டு இருந்தது ஒரு பிரிண்டர் இல்லை என்று, நான் சொன்னேன் கூட்டத்திலே தீர்மானம் எடுக்கப்பட்டு இருந்தது பிரிண்டர் இனை கேட்டால் தருவார்கள். நீ செய்த குற்றத்திற்கு நான் என்ன ஒதுக்குகிறார்கள் என்றா சண்டையிடுவது. நீங்கள் என்ன வேலை செய்கின்றீர்கள். உங்களது கடமைகளை சரியாக செய்யாமல் ஏன் எங்களை இவ் இடத்தில் விரிசலை உண்டு பண்ணுகின்றீர்கள் என்று கூறிவிட்டு வந்தோம்.

கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கு பொறுப்பு நிர்வாகம். எனவே அதனைப் பாரத்து அங்கே இருக்கின்ற கடமைகளை முறையாக செய்து இதை ஒரு உப அலுவலகமாக இயங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு வழங்கும் பட்சத்தில் மல்வத்தையில் உழவி பயிர் செய்தால் நல்ல நோக்கத்தோடு கௌரவ உப தவிசாளர் அவர்கள் முயற்சி செய்தார், அவர் பராமரித்தார் ஆனால் அதனை பராமரிப்பதற்கு அங்கே இருப்பவர்கள் மேற்கொண்டு செல்வதற்கு இயலாமல் போய்விட்டார்கள். ஏனெனில் அங்கே கண்காணிப்பாளர்கள் இல்லை. முகாமைத்துவம் இல்லாத காரணத்தினால் இந்த குறைபாடுகள் நடக்கின்றது. எனவே முகாமைத்துவங்கள் சீர் செய்யப்பட வேண்டும். சீர்செய்யப்பட்டாலே தவிர என்னதான் செய்தாலும், எத்தனை வேலிகள் அமைத்தாலும் அது நிச்சயமாக நடக்காது. அடுத்ததாக ஒரு காரணத்தை தட்டிச் சென்றார். வளத்தாப்பிட்டி பூங்கா தொடர்பாக, உண்மையிலே வளத்தாப்பிட்டி பூங்கா என்பது அன்றய மகான் என்றுதான் கூற வேண்டும். அஸ்ரப் அவர்கள் ஒரு தெளிவோடு 02 கிராமங்களையும் மையப்படுத்தி பொது இடத்திலே விளையாட்டு மைதானத்தையும், பொதுப்பூங்காவையும், சுகாதார நிலையத்தினையும் அமைத்திருந்தார்.

இந்த இடம் தற்போது 2 கிராமங்களுக்கும் அல்லது 04 கிராமங்களுக்கும் பொதுவான ஒரு இடத்தில் இருப்பதால் ஒவ்வொருவரும் தனது வீட்டுக்கு அருகே சிறுவர் பூங்கா கேட்கின்றார்கள், தனது வீட்டுக்கு அருகே சுகாதார நிலையம் வேண்டும். தனது வீட்டுக்கு அருகிலே விளையாட்டு மைதானம் வேண்டும். இப்படி இருப்பதனால்தான் அவர்கள் பராமரிக்காமல் இருக்கின்றார்கள். இருந்தாலும் உடைந்து இருந்தால், சிதைந்து இருந்தால் பார்த்துவிட்டு எம்மால் செல்ல முடியுமா என்றுதான் உங்களது ஒத்துழைப்புடன் அதனை 02 முறை சீர்செய்து இருக்கின்றோம். தற்போதும் 3வது, 4வது தடவையாக சனசமூக நிலையத்தினால் சீர்செய்தார்கள். ஆனால் யானை வந்து

வேலியை உடைத்து கொங்ரீட் தூண்களை உடைத்து வைத்திருக்கின்றது. அவர்களிடம் கூறினேன் இப்படி விட்டால் எமக்கு கெட்ட பெயர். எனவே சனசமூக நிலையத்தின் மூலம் இதனை திருத்துங்கள் என்று, எனவே அவர்கள் திருத்தினால் கூட மக்கள் அந்த இடத்திற்கு வராதது ஒரு குறையாக இருக்கின்றது. இதுதான் பிரச்சினையே தவிர இதற்கு மேலதிகமாக நிர்வாகத்தை நடாத்துகின்ற, பரிபாலிக்கின்ற எங்களது பொறுப்புக்களாக அது இருக்க முடியாது என்பது சிறுவர் பூங்காவின் நிலைப்பாடு. அடுத்ததாக உமது உப அலுவலகத்தின் பொறுப்புக்களை சற்று ஆய்வு செய்து செயற்படுத்துவது சிறப்பாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

மல்வத்தை கடைத்தொகுதி திருத்தம் தொடர்பாக, அக் கடைத் தொகுதி 03 அறைகளைக் கொண்ட கடைத்தொகுதியாக இருக்கின்றது. அது சபையின் சொத்து ஒரு போதும் கைவிடப்படக்கூடாது. அது புணரமைக்கப்பட்டு எமது வருமானத்தை 150.00 ரூபா கொடுக்க முடியாது. ஏறக்குறைய ரூபா 1000.00, ரூபா 2000.00 அறவீடு செய்து அதை எமது சொத்தாக வழிநடத்த வேண்டும். அதற்கு பக்கத்திலும் ஒரு துண்டு காணி இருக்கின்றது. அதிலும் அண்மையில் கொரோனா காலத்தில் பாதுகாப்பு பிரிவினர் வந்து தற்காலிக முகாம் அமைத்து இருந்தார்கள். அதையும் சபையில் கூறினேன். அதையும் எங்களுக்கு சொந்தமான சொத்தாக இருக்கின்றது. அதை கைவிட்டோமானால் வீதியோர வியாபாரி பிடித்துக் கொள்வார். காலப்போக்கில் அவர் அதை உரிமை கொண்டாடுவார். எம் சொத்து அது கைவிட்டு போய்விடும். எனவே அதை புணரமைப்பதுதான் சிறப்பு என கருதுகின்றேன்.

### தீர்மானம் - 04/32/14

மல்வத்தை சந்தியிலுள்ள கடைத் தொகுதியினை திருத்தம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வீ.ஜெயச்சந்திரன் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

முதியோர் நிகழ்வினை சனசமூக நிலையம் பாரம் எடுக்க வேண்டும். அடுத்தது மல்லிகைதீவு நீர் பிரச்சினை இந்த சபை அமைக்கப்பட்ட காலத்தில் இது பிரச்சினையாக வந்து நாங்கள் கௌரவ அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களிடம் இதற்கு உதவியை நாடி இருந்தோம். அந்த நேரம் 16 மில்லியன் அதற்கு நாமும் முயற்சி எடுக்கப்பட்டு Estimate செய்தும் அது செயற்படுத்தப்படவில்லை. ஏனென்றால் நில நீர் பாவித்ததனால் 5, 6 பேர் Kidney பாதிக்கப்பட்தனால் CKD Project இற்கு கீழ் உள்வாங்க சொல்லி அது நடக்கவில்லை. சென்ற DCC கூட்டத்தில் இது ஒரு பிரச்சினையாக எடுக்கப்பட்டது. அதில் நான் எழும்பி நாங்கள் அவர்களின் குடிநீர் பிரச்சினையை எங்கள் செலவில் செய்து வருகின்றோம் என்று கேட்டு, அதை விருத்தி செய்வது என்றால் அதற்கு எந்த அறவீடும் செய்வதில்லை.

நீர் வழங்கல் சபை கூட பணம் அறவிட்டுதான் நீர் கொடுக்கின்றது. பிரதேச சபை நீர்க் கட்டணம் இல்லாமல் வழங்குகின்றோம் என்று, இவ் விடயத்தை மாவட்ட செயலாளருடன் கலந்து ஆலோசித்து அதை அவர்களினால் நிவர்த்தி செய்யாவிட்டால் நாம் குடிநீர் வினியோகத்தை கூட்டலாம். ஆனால் ஒரு அறவீடு செய்யவரும். நீர் வழங்கல் சபை நீர் கொடுத்தாலும் அந்த அறவீடு ஒன்று இருக்கின்றது. அப்படி ஒரு ஏற்பாட்டை செய்து அதை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். அமைச்சருக்கு மீண்டும் கௌரவ உறுப்பினர் நளீம் கூறியவாறு நான் மாகாண நிர்வாக ரீதியில் அதை அம்பாரையில் இருக்கும் AGM உடன் இதைப்பற்றி கலந்துரையாடி அதன் பின் 2 தடவை கடிதம் எழுதி அமைச்சு மட்டத்தில் இருக்கின்றது. அதை நமது ஆளும் தரப்பு உறுப்பினர்கள் கௌரவ அமைச்சர் ஊடாக அதை துரிதப்படுத்தி முடியுமானால் உதவியாக இருக்கும். அக் கடிதங்களின் பிரதிகளை நான் உங்களுக்கு தரலாம்.

**தீர்மானம் - 04/32/15**

மல்லிகை தீவுக்கு தற்போது வழங்கும் குடிநீர் பற்றாக்குறையாக உள்ளதனால் கட்டண அறவீட்டுடன் மேலும் ஒரு நீர்த்தாங்கி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கல்வெட்கள் அமைப்பது சம்மந்தமாக பேசப்பட்ட நேரம் நான் பேசுவதற்கு நேரம் கேட்டேன். அது வழங்கமுடியவில்லை. ஏற்கனவே இந்த சபையிலே எழுத்து மூலமாகவும், சபை தீர்மானமாகவும் எடுக்கப்பட்ட கல்வெட்கள் அவற்றையும் இதனுடன் சேர்த்துக் கொண்டு செய்ய வேண்டும். புளியடி 2ம் வீதியிலே ஒரு கல்வெட் அமைக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. அவ்வாறு வைத்தியசாலை 2ம் குறுக்குத் தெருவிலே ஒரு கல்வெட் அமைக்கவேண்டி இருக்கின்றது. அதே நேரம் 20 வீட்டுத் திட்டத்திலே ஒரு கல்வெட் தக்வா நோத் வீதி என்று, அவ் வீதியிலே ஒரு கல்வெட் அமைக்க வேண்டி இருக்கின்றது. கைகாட்டி சிறுவர் பூங்காவிற்கு அருகாமையில் இருக்கின்ற கல்வெட் இன்று மழை நீர் பெய்கின்ற நேரம் அக் குழாயில் 4 வடிகான்களால் வருகின்ற நீர் 2 அடி குழாய்க்குள் செல்ல வேண்டிய தேவை இருக்கின்றது.

அதனால் அப்பிரதேசத்திலே வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. அல்லது வீடுகள் தாழ்கின்ற நிலமையில் இருக்கின்றது. அதே போன்று SP 19 கிளைக்கு முன்பாக உள்ள கல்வெட் அண்மையிலே கௌரவ தவிசாளர் அவர்கள் நேரிலே சென்று பார்வையிட்டது. அந்த கல்வெட்டால் இன்று கணரக வாகனங்கள், பாரஊர்திகள் செல்வது மிகவும் அபாயகரமான சூழ்நிலை இருக்கின்றது. அதே போன்று புளக் ஜே மேற்கு 1, 2ம் பிரிவிலே உள்ள மத்திய வீதியில் 7, 8 குடும்பங்கள் மழை பெய்கின்ற நேரம் மழை நீர் ஓடமுடியாமல் அவ் வீடுகள் நீர் ஏறுகின்ற நிலமை இருக்கின்றது. அதற்கான சிறிய வடிகான் ஒன்றும் அமைத்து கல்வெட்டோடு பொருத்த வேண்டி இருக்கின்றது. எனவே இவற்றையும் அவற்றோடு தொடர்புபடுத்தி அந்த குழுவினர் சிபார்சு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த மாதம் ஒக்டோபர் 10 ஆந் திகதி Mental தினமாக பிரகடனம் செய்யப்பட்ட ஒரு ஆண்டு என்பதையும் நினைவு கூறி, இந்த ஆண்டில் சில துஸ்பிரயோகங்கள் நடை பெறுவதையும் எங்கள் எல்லோராலும் கண் ஊடாக காணப்பட்டிருக்கின்ற விடயமாகவும் இருக்கின்றது. இந்த மன நோயாளர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கான Care வழங்குவதற்கு எங்களது சபையிலும் பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதையும் நினைவு கூறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கிழக்கு மாகாண ஆளுநரால் 2184/9 என்ற வர்த்தமானி ஒன்று வெளியிட்டுள்ளார். பிரதேச உறுப்பினர்களுக்காக தொலைபேசி கட்டணமாக ரூபா 1000.00 வழங்குவதற்கும், அதனைப் போன்று பிரயாணப்படியாக ஒரு கூட்டத்திற்கு கலந்து கொள்ளச் சென்றால் தவிசாளருக்கு ரூபா 2000.00 உம், உப தவிசாளருக்கு ரூபா 1500.00 உம், உறுப்பினர் ஒருவருக்கு ரூபா 1000.00 உம் 10 நாட்களுக்கு வழங்கலாம் என்று, இதனைப் போன்று குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டால் 7 மணித்தியாலயத்திற்கு மேலதிகமாக கலந்து கொண்டால் ரூபா 700.00 உம், மாவட்டத்திற்கு வெளியில் சென்றால் ரூபா 2000.00 உம் வர்த்தமானி வெளியீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே அத்தனை உறுப்பினர்களுக்கும் தொலைபேசி கட்டணத்திற்கான அங்கீகாரத்தை இந்த சபை ஏகமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்கான கொடுப்பனவை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் சுட்டிக்காட்டிய வர்த்தமானி இன்று சர்ச்சைக்குள்ள வர்த்தமானியாக மாறியுள்ளது. அவருக்கே தெரியும் ஆளுநர் அவர்கள் அதை இரத்து செய்து விட்டதாக, அதில் கொடுப்பனவுகள் கொடுப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அதில் முதல் பகுதியை வாசிப்பீர்களானால் எந்த சபையினாலும் அந்த சட்டதிட்டங்களுக்கு நாம் நடைமுறைப்பட இயலாது. அந்த வர்த்தமானியின் படி சபை வாகனம் சம்மாந்துறை எல்லைக்கு வெளியில் செல்ல வேண்டுமானால் ACLG இடம் கேட்க வேண்டும், மாவட்டத்திற்கு வெளியே செல்ல வேண்டும் என்றால் CLG இடம் கேட்க வேண்டும் என்று, எத்தனை லீற்றர் டீசல் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லா தவிசாளர்களும் அதுவும் அம்பாரை பகுதியில் இருக்கும் தவிசாளர்கள் எல்லோரும் அதை ஆளுநரிடம் சுட்டிக் காட்டி நான் அம்பாரையில் DCC கூட்டம் முடிந்தவுடன் ஆளுநரை சந்தித்த போது அவர்களுக்கு வட மத்திய மாகாணத்தின் வர்த்தமானியின் பிரதியை கொடுத்து நீங்கள் பிழையாக பிரசுரிக்கின்றீர்கள் என்றவுடன் உடனே அவர் அதனை இரத்து செய்கின்றேன் என்று, சென்ற கிழமை அவரின் செயலாளர் என்னுடன் கதைத்து சில திருத்தங்களைப் பற்றி பேசினார்.

சட்ட பூர்வமாக அந்த கடிதத்தை எழுதிவிட்டுதான் உங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் நான் ஒரு கடிதம் ஒன்று ஆளுநருக்கு வரைந்து இருக்கின்றேன். ஆளணிக்கு எழுதியவாறு. இது அரசியல் யாப்பின் 9வது Schedule இல் 4வது பகுதியின் படி இந்த சபையின் அங்கீகாரத்தை கட்டுப்படுத்துவதான முயற்சியாக இருக்கும். அடுத்தது இந்த கொடுப்பனவுகள் பொதுவாக வர்த்தமானி செய்யப்பட்டாலும் சில சபைகளுக்கு அவர்கள் சபையை நடாத்துவதற்கோ பணம் இல்லை. வர்த்தமானி என்ன சொன்னாலும் சபை தீர்மானம் எடுக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் சபைக்கு வருவது இந்த கொடுப்பனவுகளுக்காக அல்ல. மக்களுக்கு சேவை செய்வதற்காக, ஆனால் அது செய்வதற்கு உங்களுக்கு இந்த சபையின் வருமானத்தில் நாம் உதவ வேண்டும் என்றால் நிச்சயமாக நாம் அதை பரிசீலனை செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு எமது கௌரவ தவிசாளர் குற்றஞ்சாட்டப்பட்டார். இக் குற்றம் 20 பேரையும் சாரும் என கூறி நான் எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கல்வெட் அமைத்தல் பிரேரணை வந்த போது உரிய நேரத்தில் பேச வேண்டும் என்று குறிப்பிட்டீர்கள். இருந்தாலும் சென்னல் கிராமம் 1ம் வீதி மிக நீண்ட காலமாக புணரமைக்கப்படாது இருந்து அதற்கு இடையிலே Irrigation அதன் நடுவே ஒரு கல்வெட் அமைக்க வேண்டும். அதையும் உள்வாங்க வேண்டும். அதே போன்று உடங்கா – 02 தொப்பியர் வீதி தற்போது புதிதாக விவசாய காணிகளுக்கு இடையிலே அமைந்துள்ள வீதி. அது எங்களுடைய பல்கலைக்கழகம் சார்ந்த பகுதிகளை இலகுவாக சென்றடைவதற்கான ஒரு பாதையாக அமைந்திருக்கின்றது. அந்த இடத்திலே இன்று இருள் சூழ்ந்த நிலையில் காணப்படுகின்றது. அதாவது ஆண்டியர் சந்தியில் இருந்து சபூர் பள்ளிவாசலுக்கு செல்லும் வீதியில் ஊடறுக்கப்படுகின்றது. அந்த வீதிக்கான மின்சார இணைப்பை வழங்குவதற்கு இச் சபையிலே ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

அதே போன்று முன்னாள் அமைச்சர் கௌரவ ரிஷாட் பதியுதீன் அவர்கள் மஹல்லா மஹல்லா மையவாடியிலே 50 இலட்சம் ரூபாவில் ஒரு ஜனாசா மண்டபத்தை புணரமைத்திருந்தோம். அந்த ஜனாஸா மண்டபம் உள்ளூராட்சி மாகாண திணைக்களத்தின் ஊடாக ஒப்பந்தம் செய்யப்பட்டு எமது சபையின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தும் 2018ம் ஆண்டு அவ் வேலைத்திட்டம் அமுல் படுத்தப்பட்டிருந்தது. 2019 ஒரு வருட காலத்திற்கும் முடிவுறுத்தப்பட்ட நிலையிலும் தரைப்பகுதி இன்று சரியாக கொங்றீட் இடாமையினால் நடுவே வெடிப்பு ஏற்பட்டு இருக்கின்றது. இன்று அவ் ஒப்பந்தகாரர் பிடிகாசை பெற்றிருப்பாரா என்று எனக்கு தெரியாது. இருந்தாலும் இந்த சபையின் ஊடாக உரிய வேலைத்திட்டம் திருப்திகரமாக முடிவடைந்ததன் பின்னர் அந்த பிடிகாசை வழங்குவதற்கு ஆவண செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பிடிகாசுகள் வேலை செய்து 06 மாதத்திற்குள் ஒன்றும் இல்லாவிட்டால் கொடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அப்படி வெடிப்புகள் ஏற்பட்டிருந்தால் நிச்சயமாக அதை நாம் நிவர்த்தி செய்ய வேண்டும். அதை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்போம். தெரு விளக்குகளை பொருத்தமட்டில் அதை எந்த தூண்களுக்கு செலுத்த வேண்டும் என்று இருக்குமானால் அதையும் செயற்படுத்துவதில் பிரச்சினை இல்லை. கழற்றிய இலாம்புகள் பொருத்துவதற்கு இருக்கின்றது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபையில் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் அவர்களை கௌரவப்படுத்த வேண்டும். அழகான முறையில் அறபா வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள கல்வெட் போடுபட்டுள்ளது. இப்படியாக நமக்கும் நமது காசுகளை மிச்சம் புடிப்பதற்கு நிறைய பேர் இருக்கின்றார்கள். உறுப்பினராக இருந்து செய்ய முடியாத வேலையை நமது தொழில்நுட்ப உத்தியோகத்தர் செய்திருக்கின்றார் என்றால் நிச்சயமாக நாம் நன்றியை தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவ் விடயம் உண்மையாக பாராட்ட வேண்டிய விடயம். RDD அந்தப் பாதையை செய்த படியினால் புத்திசாலித்தனமாக அவரின் உதவியை நாடி ஏறத்தாள 80000.00 ரூபாவிற்கு பெறுமதியான வேலை ஆகும். இதுதான் செய்ய வேண்டிய விடயங்கள் நமக்கு இந்த சபையில் பணம் இருக்கின்றது என்ற எண்ணத்தில் நாம் பயணிக்கும் போது இறைவன் வெவ்வேறு வழியிலும் சோதிக்கின்றான். இன்றைக்கு பணம் என்ன செய்யலாம் என்ற நிலைக்கு வந்துவிட்டோம். பிழைகள் எல்லோரும் செய்வதுதான். ஆனால் அதை ஆக்கபூர்வமான முறையில் மீண்டும் உங்கள் எல்லோரிடம் மிகவும் பணிவாக வேண்டிக் கொள்வது இந்த சபையை ஒரு அரசியல் களமாக மாற்ற வேண்டாம். உங்களுக்கு ஒரு காலமும் எதுவும் மறைக்கப்படுவதில்லை. ஆனால் இனிமேல் இந்த விடயங்களில் வேறு கோணத்தில் சிந்திக்க வேண்டியதாக இருக்கின்றது. அந்த மாற்றங்கள் ஏற்படும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வாசிப்பு மாதம் சம்மந்தமான கூட்டம் ஒன்று என்னையும் கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்களையும் அதற்கு பொறுப்பாக்கப்பட்டது. அதற்கு சென்றிருந்தோம். அக் கூட்டம் நடந்த இடத்தில் அக் கட்டடத்தையும், சுற்றுப்புர சூழலையும் வைத்து பார்க்கும் போது அங்கு இருக்கின்ற வாசகர்களுக்கும், தொழில் புரிகின்ற ஊழியர்களுக்கும் அந்த வாசகசாலை ஒரு பொருத்தமான வாசகசாலையாக இல்லை. ஏனென்றால் தற்போது கடும் சூடான காலம். உயரம் என்று இருக்கின்ற அக் கட்டடத்தின் உயரம் காணாது. போதியளவு தளபாடங்கள் போட்டு வாசகர்கள் வந்து கற்கக் கூடிய அளவுக்கு அக் கட்டடத்தின் சுற்றளவும் காணாது. அங்கு இருக்கின்ற புத்தகங்கள் பிள்ளைகள் சொல்கின்றார்கள் இந்த Syllabus இற்குரியது இல்லை, வேறு புத்தகங்கள் எடுத்து தாருங்கள் என்று, நான் கடந்த கூட்டத்தில் இந்த நூலகத்திற்குரிய புத்தகங்கள் கொடுக்க வேண்டும் என்று கூறினேன். ஆனால் புத்தகங்கள் இருந்தாலும் அக் கட்டட வசதி போதாமல் இருக்கின்றது. எனவே எமது பழைய மடுவத்தை நூலகமாக அமைத்து இடமாற்றம் செய்து நவீன முறையில் கட்டடத்தை அமைக்க வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அக் கட்டடம் உண்யைமாக என்னைப் பொருத்தமட்டில் Reading Room ஆக மட்டும் பாவிக்கலாமே தவிர நூலகமாக பாவிக்க இயலாது. அது சபைக்குரிய கட்டடம் இல்லை. ஒரு பொதுக் கட்டடத்தில் இந்த நூலகம் அமைய வேண்டும் என்று அந்த காலத்தில் எடுத்த முயற்சி. நிச்சயமாக நாம் வருகின்ற வருடத்தில் அரசின் உதவியை நாடி பழைய மடுவத்தில் ஒரு நவீன நூலகம் ஒன்று உருவாக்குவதற்கு முயற்சி எடுப்போம் என்று கூறி, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை